# ஆத்மஜோதி



— மலேசியா —

ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலய முருகன்

ஆவணி — 1979.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
-சுத்தானந்தர்

ஆசிரியர்: நா. முத்தையா

ஜோதி: 31 – சித்தார்த்தி ஸ்ரீ ஆவணி மீ 1௨ – (17-8-79) சுடர்: 10


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மரத்தாண்டவரை வணங்குவோம் | — | 433 |
| எண்ணங்களை குறைத்துக்கொள்ள வழி | — | 434 |
| ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் | — | 435 |
| வள்ளலார் | — | 442 |
| எல்லாம் அவன் செயல் | — | 445 |
| வாழ்க்கை விளக்கம் (5) | — | 450 |
| நிலையாமை | — | 456 |
| சுகமும் துன்பமும் ஒன்றாக வரும் | — | 460 |
| ஆத்ம சிந்தனை | — | 461 |
| கண்களும் களிஞரும் | — | 462 |
| மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா | — | 466 |
| நவக்கிரக வணக்கம் | — | 469 |
| இந்துமத வினாவிடை | — | 474 |
| 'பனுபித் தெளஹீத்' எனும் ஐக்கிய நிலை | — | 476 |
| ஞானகுருவின் அனுக்கிரகம் | — | 478 |


## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்,

அன்பு வணக்கம்

தங்கள் கைகளில் கிடைக்கும் இந்தச் சுடர் 31ஆவது ஆண்டு பத்தாவது சுடராகும். கடந்த 30 ஆண்டுகளாகச் சோதிக்குக் கிடைத்த அன்பர்களின் ஆதரவு எதிர்காலத்திலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு அன்பர் இல்லத்திலும் ஜோதி சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்பதே எமது தலையாய குறிக்கோள். ஒவ்வொரு சந்தா நேயரும் தத்தம் புதிய ஆண்டுச் சந்தா 10 ரூபாவை அனுப்பிவைப்பதோடு ஒவ்வொரு புதிய அங்கத்தவரை அறிமுகம் செய்துவைத்தால் சோதியின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டுபுரிந்தவர்களாவீர்கள்.

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி (இலங்கை)

நா. முத்தையா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரத்தாண்டவரை வணங்குவோம்.

மங்களஞ்சேர் மரத்தாண்டவர் பாத
மலரடியைச் சென்னி வைத்து
தங்குமதி கொண்டுடையோர்தாம் துதிக்கத்
தம்வினைகள் பறந்தோடச் செய்
பங்கயத்தி னருளுடையோர் பன்முறையும்
பயனடைவர் பாரில் நாளும்
திங்கள் சொல் திருமுருகன் திருப்பாதத்
தொண்டரெல்லாம் வாழ்க! வாழ்க!!

—தரங்கம்பாடி அருணாசலக் கவிஞர்.

காடுங்காவும் கவின்மிகுந்த காட்சிதருவான் மலைகிழவோன்
கருத்திற் பதித்துப் பெறற்கரிய கதியைப் பெறுதல் கடனென்றும்
கூடும் யாறும் குளமுமகிழ்கூட அமர்ந்து குறிஞ்சிநிலம்
கோமான் அருள்வான் விரும்புவரைக் குறித்து வேண்டிப்-
பெறுக என்று
நாடி ஆற்றுப் படைநூலில் நவின்ற அதனை நன்குணர்ந்தே
நண்ணும் மலைநாட்டினிற் காட்டு நடுவே தெளிநீர்நிறை கான்யாறு
ஓடும் கரையில் எழுந்தருளி உற்றுர்க்குவகை வழங்குமனே
உற்றேரும் மரததாண்டவராகி ஒளிரும் குமராவருகவே!

—பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்.

புரத்தாண்ட சிவன்நெற்றிப் புறக்கனலில் தோன்றிப்
பொலிவுற்ற ஆறுமுகம் பூமகளே மீண்டும்
மரத்தாண்ட புரந்தன்னில் மரத்தடியில் தங்கி
மதியோடு நிதிபலவும் மட்டறவே நல்கி
வரத்தாண்ட மூர்த்தியென வையகமே போற்ற
வனப்போடு கோலேந்தி வாழ்விக்க வந்தான்
சிரத்தாண்ட கங்கைமகன் செல்வனவன் தானே
சிரம்வைத்துப் போற்றிடவே சேர்ந்திடுவோம் வாரீர்!

—சி. அன்பானந்தன் – பினங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களைக் குறைத்துக் கொள்ளும் வழி

— சுவாமி சிவானந்தா —

இறப்பர்த் தோட்டங்களில் இறப்பர் மரங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, பெரிய மரங்களின் அருகிலுள்ள சிறிய மரங்களை வெட்டிவிடுவார்கள். இம்மாதிரிச் செய்வதால் பெரிய மரங்களிலிருந்து இறப்பர்பால் அதிகமாகக் கிடைக்கும். அவ்வாறே நீயும் உன் மனதிலுள்ள எண்ணங்களை ஒவ்வொன்றாக அழித்து அவற்றின் எண்ணிக்கையைக் குறைத்து அமர நிலையாகிய அமிர்தத்தைப் பருகுவாயாக!

ஒரு கூடையிலுள்ள பழங்களில் கெட்டுப்போனவைகளை எறிந்துவிட்டு, நல்லவைகளைமட்டும் வைத்துக் கொள்வதைப் போல உன் மனதிலும் நல்ல எண்ணங்களை வைத்துக்கொண்டு தீய எண்ணங்களை நீக்கிவிடு

ஒரு கோட்டையிலுள்ள சிறு வாயிலின் வழியே விரோதிகள் ஒவ்வொருவராக வரும்போது, அவர்களை வெட்டி வீழ்த்தும் போர்வீரனைப் போல அடிமனத்திலிருந்து மேலே வரும் எண்ணங்களை ஒவ்வொன்றாக வெட்டி எறிந்துவிடு.

ஒரு பல்லியின் வால் அறுந்துவிட்டால் அறுபட்டவால் சில நிமிட நேரம் துடித்துக் கொண்டிருக்கும். ஏனென்றால் அதில் சிறிதளவு பிராணன் அல்லது உயிர் இருக்கிறது. அது ஓரிரண்டு நிமிடங்களில் அடங்கிவிடும். அம்மாதிரியே உன் மனதிலுள்ள எண்ணங்களைக் குறைத்த பிறகும், சில எண்ணங்கள் பல்லியின் வாலைப்போலத் துடித்துத் திரியும். ஆனால் அவைகளுக்கு எவ்வித ஆற்றலும் இல்லை. அவைகளால் எவ்விதத் தீங்கும் நேராது. அவைகளில் உயிரோட்டமில்லை.

நீ தினந்தோறும் மனதை ஒருமுகப்படுத்துவதிலும், தியானத்திலும் ஒழுங்காக இருப்பாயானால், அவைகள் எண்ணெய் இல்லாத விளக்கைப் போல் தாமே செத்துமடியும். விசாரமும் தியானமும் முக்கியம் என்பதை மறந்துவிடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம்

ஆசிரியர்

மலேசிய நாட்டில், அந்த நாட்டின் ஜனத்தொகையில் பத்தில் ஒரு பங்குக்குக் கூடுதலான தமிழர்கள் வசிக்கின்றனர். அவர்களில் 95 சதவீதத்தினர் தொழிலாளப் பெருமக்களாவர். இவர்கள்தான் இங்கு இந்து சமயத்தையும் தமிழையும் தமிழர் பண்பாட்டினையும் காத்து வருகின்றனர்.

மாரான் மாவட்டம் மலைவளம் செறிந்தது; காடுகள் நிறைந்தது. பகாங்மாநிலத்திற்கே அழகு தருவது. மலேசிய மாநிலங்களில் பகாங் மாநிலம் மிகப் பரந்து விரிந்த இயற்கை வளங்கள் செறிந்த மாநிலமாகும். பகாங்மாநிலத்தில் குவாந்தான் ஒரு அழகிய நகரம். குவாந்தானிலிருந்து "ஜரண்டுட்" செல்லும் வீதியின் 67ஆவது மைலில் மாரான் நகருக்கு அருகில் ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் மாண்புடன் விளங்குகிறது.

சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு 'ஜரண்டுட்' வீதியை அமைக்கும் போது குறுக்கே நின்ற உருத்திராட்ச மரம் ஒன்றை தொழிலாளர் வெட்ட முனைந்தனர். அம் மரத்தை வெட்டும் போது இரத்தம் பீறிட்டு எழுந்ததைத் தொழிலாளர்கள் கண்ணுற்றனர். அப்பால் வெட்டுதற்கு அஞ்சி ஒதுங்கினர். அத்தொழிலாளர்களில் ஒருசில தமிழ்த் தொழிலாளர்களும் இருந்தனர். அத்தொழிலாளர்கள் ஒரு வேலாயுதத்தை அம்மரத்தின் அடியில் நாட்டி வழிபாட்டை ஆரம்பித்தனர்.

இங்ஙனமாக அவ்வழிபாட்டை முதன்முதல் ஆரம்பித்தவர் ஒரு தமிழ்க்கிழவர் ஆவர். அவர் ஒரு துறவியாகவும் இருந்தார். அன்று தொடக்கம் மலேசியத் தமிழ் மக்களுடைய உள்ளத்தில் மரத்தாண்டவர் இடம் பெற்றுவிட்டார். மரத்திலிருந்து தாண்டவம் செய்த பெருமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மரத்து ஆண்டவராக மாறிவிட்டார். வீதியின் ஓரத்தில் அமைந்துள்ள அக்கோயிலுக்குள்ளே இன்றும் புனிதம் வாய்ந்த அம்மரம் பாதுகாக்கப்பட்டு அதன் அருகில் முருகக் கடவுளுக்கு பீடம் அமைத்து மாபெரும் கோயில் எழுப்பப்பட்டு பல்லாயிரக் கணக்கான மக்களால் வணங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாலயம் ஈழத்திலுள்ள முரிகண்டி விநாயகர் ஆலயத்தை நினைவூட்டுகின்றது. அவ்வீதியின் வழியாக வாகனம் ஓட்டிச் செல்பவர்கள் எந்த இனத்தவராக இருந்தாலும் தங்கள் வாகனங்களை நிறுத்தி, திருநீறு பெற்றுத் தங்கள் பயணத்தை தொடர்கின்ற காட்சியை இன்றுங் காணலாம்.

அமைதியான சூழ்நிலை; எந்தவிதமான ஆரவாரமும் அற்ற இடம். தியானம் தானுகவே சித்திக்கும் இடம்.

"சும்மா இரு சொல் அற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"

என்ற அருணகிரியாரின் வாக்கை உணரும் இடமாக-அநுபவிக்கும் இடமாக—விளங்குகின்றது. எத்தனையோ ஐரோப்பிய அதிகாரிகளையும் ஆங்கிலேய தோட்ட முதலாளிகளையும் ஈர்த்து ஈர்த்து என்புருக்கிய தெய்வமாக விளங்குகின்றார் மரத்தாண்டவர். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த திரு. ஹென்றி மில்லர் என்பவர், மூன்று முறை மரத்தாண்டவருக்கு காவடி எடுத்திருப்பதும், மேலும் ஆண்டு தோறும் பங்குனி உத்தரத்திற்கு முதல்நாள் ஆஸ்திரேலியாவிலிருந்து தொலைபேசிமூலம் தமது பிரார்த்தனைகளை இறைவனுக்குத் தெரிவிக்குமாறு கூறிவருவதும் குறிப்பிடத்தக்க சான்ருகக் கூறமுடியும்.

சிலாங்கூர் என்பது மலேசியாவின் இன்னொரு மாநிலம். அங்கு கோலக்குபு பாருக்கு அருகிலுள்ள கெர்லிங் ரப்பர் தோட்டம் ஒரு ஐரோப்பியருக்குச் சொந்தமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பெயர் திரு. 'எட்லர்' என்பது. இவர் ஆண்டு தோறும் தமது தோட்டத் தொழிலாளர்களை பஸ்ஸில் அழைத்து வந்து மனம் உருகி வழிபடுங்காட்சி கண்டோர் மனதை உருக்குவதாகும். மலேசியாவுக்கு வருகை தந்த குன்றக்குடி அடிகளாரும், திருமுருக கிருபானந்தவாரியாரும் மரத்தாண்டவர் கோயிலை மனமுருகி வழிபாடு செய்துள்ளார்கள். மலேசியத் தமிழரிடையே சமய உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய வரும் சமூகத் தொண்டருமான பால கவி திரு. வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் "ஸ்ரீமரத்தாண்டவர் பதிகம்" என்னும் தோத்திரப்பாமாலை ஒன்றைப் பாடித்தந்துள்ளார்கள்.

மரமாகி, வேலாகி, பின்னர்க்குடிசைக் கோயிலாகி பக்தர்களின் இதயங்களில் பக்திப் பெருக்கையும் அருளையும் வாரி வாரி வழங்கிவருகின்ற மரத்தாண்டவருக்கு இன்று சுமார் அரை லட்சம் வெள்ளியில் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்துள்ளார்கள். மரத்தாண்டவர் மகிமையைப் பத்தர்கள் நாள் முழுவதும் சொல்லிக்கொண்டிருப்பர். தன் அடியார்களின் இடர்களைந்து அவர்களைத் தனது திருவடி நிழலில் சேர்த்த செய்திகள் கணக்கில் அடங்கா. ஞாயிறுதோறும் மலேசியா சிங்கப்பூரிலிருந்து வரும் பக்தர்களின் கூட்டமே அதற்கொருசான்று. நாள் தோறும் நூற்றுக்கணக்கானவர்கள் யாத்திரையாக வந்து திரும்புகின்றனர்.

வாய்பேச இயலாதிருந்த சகோதரி இலட்சுமிக்கு பேசும் ஆற்றல் கிடைத்த இடமும், நடக்கமுடியாமல் தவித்த மூன்றரை வயதுப் பாலகனைக் கோவிலைச் சுற்றி நடக்க வைத்த இடமும், குழந்தைச் செல்வங்கள் இன்றி ஏங்கிவந்த குலமகளிருக்குக் குழந்தைச் செல்வத்தை அளித்த இடமும், எத்தனையோ தமிழ்ப் பெண்களுக்கு பிரசவ இடமாகவும் விளங்கி வந்திருப்பது மரத்தாண்டவர் சன்னிதானமே. இதற்கு எத்தனையோ ஆதாரங்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகாங் மாநில மன்னர் பகாங் சுல்தான் அவர்கள் எத்தனையோ ஆண்டுகளாக மரத்தாண்டவர் ஆலயத்தின் பால் தனிப்பட்ட அன்பையும் பாசத்தையுங் காட்டி வந்திருக்கின்றார். கும்பாபிஷேகத்திற்கு முதல் நாள் அன்று (7-2-73) புனித மரம் பாதுகாப்புடன் அப்படியே உள்ளே வைக்கப்பட்டு அழகுற எழுப்பப்பட்டிருக்கும் புதிய கோயில் இல்லத்தை பகாங் சுல்தானே மனமுவந்து வந்து திறந்துவைத்து இந்துக்களின் நன்மதிப்பைப் பெற்றார்கள். குறுக்கே செல்லும் சாலையைச் சிறிது தொலைவிற்கு அப்பால் மாற்றியமைத்து மரத்தாண்டவர் கோயிலை மேலும் விரிவு படுத்தும் கோவில் நிர்வாகத் திட்டங்களுக்கு சுல்தான் அவர்கள் ஆதரவு வழங்கி இருப்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

பங்குனி உத்தர விழா மிகப்பிரமாதமாக இங்குக் கொண்டாடப்படுகின்றது. அன்றையத் தினம் பக்தர்கள் நூற்றுக்கணக்கான வசு வண்டிகளிலும் சிறிய மோட்டார்களிலும் வந்திறங்குங்காட்சி மிக மகத்தானது. கோயிலுக்கு அருகே பாய்ந்து செல்லும் சிற்றாற்றில் பக்தர்கள் தீர்த்தம் ஆடும் காட்சியும் மனத்தை உருக்குவதாகும். மரத்தாண்டவர் அமைந்துள்ள இடம் மிகச் சிறியதாயினும் ஆலயத்தின் புகழோ மிக அளப்பரிய ஒன்றாகும்.

தற்போது கோயில் காப்பாளராக இருப்பவர் வ. சோம. சோமசுந்தரம் பிள்ளை அவர்களாவர். நீண்ட நாட்கள் புத்திரப் பேறின்றி இருந்த பிள்ளை அவர்கள் திருத்தல யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். திருக்கடையூரில் மனைவியுடன் சென்று வேண்டுதல் செய்தார்கள். இறை வழிபாட்டிற்குப் பின் திரும்பி வரும்போது நீண்ட தாடியுடன் கூடிய சுவாமிகள் ஒருவர் ஆலயத்திற்கு வெளியே காட்சி அளித்தார்கள். பிள்ளை அவர்களைக்கண்டதும் மரத்தாண்டவர் வந்துள்ளாரே என்று கூறிய சுவாமிகள், ''அப்பா! நீ ஒரு குழந்தைக்காக வேண்டியா இப்படி அலைய வேண்டும்? நீ மனைவியுடன் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ வணங்கும் மரத்தாண்டவரிடமே முறையிடு. அவர் கொடுப்பார்.'' என்று கூறிய அவர் திடீரென மறைந்து விட்டார். எங்குத் தேடியும் காணவில்லை.

ஆண்டவர் அருள் இருந்தால் முடியாத பொருள் உளதோ? முருகப்பெருமானே குழந்தையாகி வந்தார் எனும்படி அழகான ஆண்குழந்தை ஒன்று கிடைத்தது. நாகநாதன் என்று பெயர் சூட்டினர். குழந்தை பிறந்து அறுபதாம் நாளன்று நாகநாதனுடன் தாயுந்தந்தையும் பங்குனி உத்திர விழாவிற்காகச் சென்றனர். விடிந்தால் பங்குனி உத்தரம். ஆலயத்தில் பெருங்கூட்டம். ஆண்டவரை வணங்கிவிட்டு மனைவியையும் மகன் நாகநாதனையும் மகாவிஷ்ணு சந்நிதியில் மற்றப் பெண்களோடு படுத்து றங்கச் செய்துவிட்டு சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் பங்குனி உத்தர ஏற்பாடுகளைக் கவனிக்கச்சென்று விட்டார்.

அதிகாலை 4 மணி இருக்கும், அப்போது விழித்துக் கொண்ட சிலர் குழந்தை நாகநாதனை பாம்பு ஒன்று சுற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு அழுது புலம்பினார்கள். இச் செய்தி கேட்டுச் சோமசுந்தரம்பிள்ளை ஓடி வந்தார். "அப்பா மரத்தாண்டவா நீ கொடுத்த குழந்தையோடு இந்தநாகபாம்பு வடிவில் விளையாட வந்தாயா '' அப்பனே! நீ அமைதியாகவிலகி மக்கள்பயத்தைப் போக்கவேண்டும்.'' என்று மனமுருகி வேண்டினார். பாம்பு தானே நழுவிச் சென்று மறைந்தது.

ஐப்பானியர் இப்பதியை ஆக்கிரமித்திருந்த காலம். பிள்ளை அவர்களும் பண்டாரமும் வேறு சிலரும் விஷ்ணுவின் சந்நிதியில் படுத்துறங்கிக் கொண்டிருந்தார்கள், நடுச்சாமத்தில் முப்பதுக்கு மேற்பட்டயானைகள் கூட்டமாக வந்தன. ஆண்டவர் சந்நிதியில் மௌனமாக ஆண்டவரைப் பார்த்தபடியே நின்றன. துதிக்கைகளை உயர்த்தி வணக்கம் செய்தன. அமைதியாக ஆலயத்தை விட்டகன்று காட்டுக்குள் சென்று மறைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்தாண்டவர் ஆலயத்தின் சந்நிதியில் வைக்கப்பட்டிருக்கும் வலுவான உண்டியல் தனிவரலாற்றுச் சிறப்பைப் பெற்றதாகும். அந்த உண்டியலை உடைத்து அதனுள் இருக்கும் பொருளை அபகரிக்க திருடர்கள் ஏழு தடவை முயன்றிருக்கிறார்கள். உண்டியலைப் பூட்டியிருக்கும் பூட்டுக்களில் சிலவற்றை மட்டுமே அவர்களால் உடைக்க முடிந்தது. திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்ட முற்பட்ட ஒவ்வொருதருணத்திலும் சக்தி வாய்ந்த ஆயுதங்களைப் பயன் படுத்தி உண்டியலைக் கொள்ளையிட முயன்றிருக்கிறார்கள்.

கடைசித் தடவையாகத் திருடர்கள் பூட்டுகளை உடைத்து விட்டு பெட்டியை நகர்த்திப் பார்த்திருக்கிறார்கள். அவர்களால் ஒரு அங்குலம் மட்டுமே நகர்த்த முடிந்தது. ஏழாவது திருட்டு முயற்சிக்குப் பின் திருடர்கள் கோவிலின் பக்கம் இதுவரை எட்டிப் பார்க்கவே இல்லை. மரத்தாண்டவப் பெருமான் கள்வர்களையே நல்லவர்களாக மாற்றியிருக்கலாம் அல்லவா?

மிகமிகத் தூரத்தில் உள்ளவர்களும் தாம் இருந்த இடத்திலேயே நேர்த்திக்கடன் செய்த உடன் அவர்களும் துன்பம் நீங்கித் தமக்கு வசதியான போது வந்து நேர்த்திக் கடனைச் செலுத்திச் செல்கின்றனர். மரத்தாண்டவர் ஆலயத்தில் கடந்த 21 ஆண்டுகளாகத் தலைமை அர்ச்சகராகப்பணி புரிந்து வரும் உயர்திரு சித்திவிநாயகப் புலவர் அவர்கள் உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும் தமது சொந்த அநுபவம் ஒன்றைக் கூறினார்கள்.

கோவில் நிர்வாகி சோமசுந்தரம் பிள்ளைக்கும் அர்ச்சகருக்கும் இடையில் ஏற்பட்ட சிறு கருத்து வேற்றுமையினால் ஒருநாள் பகல் பூஜை முடித்த பின் அர்ச்சகர் தாம்விலகுவதாக நோட்டீஸ் ஒன்றை எழுதிவைத்து விட்டு சிறிது நேரம் உறங்கினார். யாரோதட்டி எழுப்புவது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. நெஞ்சின் மீது நாகம் ஒன்று மண்டலம் இட்டு முகத்திற்கு நேரே படம் எடுத்தாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணைவிழித்துப் பார்க்கவோ வாயைத் திறந்து பேசவோ முடியாத நிலை. உடம்புவெயர்வையால் நனைந்து விட்டது. இத்தருணத்தில் தான் அர்ச்சகரின் மருமகப்பிள்ளையான நாகரத்தினம் என்பவர் இக்காட்சியைக் கண்டு பெரும் சத்தம் இட்டார். அயலிலே நின்றவர்கள் பெருங்கூட்டம் கூடிவிட்டனர். நாகம் அசையவில்லை. என்ன சொல்லி வேண்டுதல் செய்வதென்றே அவருக்குப் புலப்படவில்லை. பணியில் இருந்து தாம் விலகிக்கொள்வதாக எழுதிய நோட்டீஸ் நினைவுக்கு வந்தது.

"அப்பா மரத்தாண்டவா! நாகம் என்னைத்தீண்டி ஞல் நான் இறந்து விடுவேன். இந்த நாகபாம்பு ஒரு தீங் கும் செய்யாமல் விலகிவிட்டால் உமது சந்நிதியை விட் டகலாமல் பணி செய்வேன்" என்று வேண்டுதல் செய்து கொண்டார். பாம்பு தானுகவே இறங்கிச் சென்று மறைந்து விட்டது. உடனேயே எழுதிவைத்திருந்த நோட் டீசையுங் கிழித்தெறிந்துவிட்டார்.

தற்போதுள்ள நிர்வாகத்தினர் "மரத்தாண்டவர்புரி" ஒன்று உருவாக வேண்டும் என்று ஆசை கொண்டுள்ளனர். அதற்கான ஆரம்ப வேலைகளை ஆரம்பித்தும் விட்டனர். கோயிலின் முன்ஞல் செல்லும் பிரதான வீதியை இரண்டு சங்கிலி தூரத்திற்கப்பால் கொண்டுசெல்வது, கோயிலுக் குப் பக்கத்தில் தமிழ்ப்பள்ளி ஒன்று அமைப்பது, யாத்திரி கர் விடுதி ஒன்று அமைப்பது, பசுமடம் ஒன்று அமைப் பது, சந்நிதி முன்பு வசந்த மண்டபம், மகா மண்டபம், கம் பீரமான இராஜகோபுரம் ஆதியன அமைப்பது, ஆலயத் தைச் சுற்றிப் பூங்காக்கள் அமைப்பது ஆதியன அவர்கள் திட்டத்தில் முக்கியமானவையாகும்.

மரத்தாண்டவபுரிக்குரிய பணியில் பங்கு கொள்ள விரும்புவோர் தத்தம் பெயராலேயே சில பணிகளைப் பொறுப்பேற்றுச் செய்யலாம் என்று நிர்வாகிகள் கூறுகின் றனர். ஒருசில பணிகள் தனிப்பட்ட முறையிலும் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. கலியுகவரதனும் கந்தப் பெருமான் உல கின் எல்லாப் பாகத்திலும் அருள்பாலித்துக்கொண்டிருக் கின்ருர் என்பதனை இதஞல் நாம் உணர முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளலார்

பி. வெங்கடேசன், யோகாசன ஆலயம்
சென்னை

செல்வருக்கு ஏவல் புரிந்தால் செல்வம் கிடைக்கும். பதவியிலிருப்போருக்கு ஏவல் புரிந்தால் பதவி கிடைக்கும். கற்றோருக்கு ஏவல் புரிந்தால் கல்வி கிடைக்கும். சில சந்தர்ப்பங்களில், இந்த நம்பிக்கை பொய்யாகி விடலாம். ஆனால் அன்பர் பணியால் அருளின்பம் பெறலாம் என்ற நம்பிக்கை மட்டும் என்றும் பொய்யாவதில்லை. உண்மையில் அன்பர் எனப்படுபவர் யாவர் என்பதை வள்ளலார் கூறுகின்றபோது சாதி வேறுபாடுகளைக் கடந்து, சமயம் கடந்து, நாடு மொழி கடந்து, செல்வர்-ஏழையர் என்ற நிலை கடந்து, கற்றவர்—கல்லாதவர் என்ற தகுதி கடந்து, பேதங்கள் அனைத்தும் கடந்து, மனிதகுலம் மட்டுமின்றி உயிர்க்குலம் அனைத்தையும் தம்முயிர்போன்று பாவித்து, ஒருமை மனத்தவராய் அன்புருவோடு நிற்பவரே அன்பர் என்றார். அதுமட்டுமின்றி அத்தகைய பெருந்தகையாளரின் உள்ளம்தான் இவ்வுலகைப் படைத்துக் காத்து வருகின்ற பேரிறைவன் வீற்றிருக்கும் புனிதத் திருவிடம் என்பதையும் தெரிவிக்கிறார். எனவே, அது போன்ற நல்லன்பருக்கு ஏவல் புரிந்து, அருள்நெஞ்சத்தைப் பெற்றிட விரும்பும் தனது மனநெஞ்சத்தின் ஏக்கத்தை எழிலோடு காட்டுகின்றார் வள்ளலார்.

"எத்தனையும் பேதமுறாது எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணியுள்ளே ஒத்து உரிமை உடையவராய் உவக்கின்றார். யாவர் அவருளந்தான் சுத்சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமென நான் தேர்ந்தேன். அந்த வித்தகர் தம் அடிக்கேவல் புரிந்திட என் சிந்தை மிக விழைந்ததாலோ".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வகையானும் பொருளீட்டி, உலகத்து இன்பங்களை யெல்லாம் தானே அனுபவித்து, விரும்பியவாறு வாழ வேண்டுமென்ற விருப்பத்தினை ' ஆசை ' எனக்கூறலாம். அறநெறியில் பொருளீட்டி, திட்டமிட்ட நேர்வழியில் நின்ருழுகி, தன்னையும் இவ்வுலகையும் படைத்திட்ட இறைவனின் அருட்பெருநிலையினை உணர்ந்து. தெரிந்து, போற்றி வாழவேண்டுமென்ற நல்விருப்பத்தினை 'அன்பு அல்லது பக்தி' எனலாம். இவ்வன்பு இறைவனிடம் கொண்டுள்ள காதலால் பெருகி, தன்னையும் தன்னகத்தேயுள்ள பேதங்களையும் கடந்து, பள்ளங்கள்தோறும் தேங்கிநிற்கும் மழைநீரைப்போன்று வாடுவோரைக் கண்டபோதெல்லாம் வாடிநின்று கருணையால் நிறைவதாகும்.

இத்தகைய கனிந்த அன்பு நிலைபெற்ற வள்ளற்பெருமான் இறைவனிடம் தனக்கு வேண்டியதை வேண்டும்போது உலகின் இன்பவகைகளை வேண்டாமல், திருவருளின் பேரின்பச் சுவைகளை வேண்டாமல், உயிரினங்கள் அனைத்திடத்தும் தான் அன்பு பாராட்டவேண்டும்; ஆண்டவரின் அருட்பெருமைகளை அவனியெங்கும் அறைகூவிடவேண்டும்; எங்கும் தெய்வநெறி பரப்பி, எல்லோரையும் இன்புறச் செய்திடவேண்டும்; அதற்கு வேண்டிய வகையில் தனக்கு அருள்புரிந்திட வேண்டும் என வேண்டுகின்ருர். பெருமானின் இப்பெருங்கருணைப் பாங்கினைச் சிந்தித்தால் நமது உள்ளங்கள் உருகும். உண்மைகள் ஒளிவிடும் என்பதற்கையமில்லை. அப்பாடலைப் பார்ப்போம். "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும், ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும், எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே எந்தை நினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும், செப்பாத மேனிலைமேற் சுத்த சிவ மார்க்கம் திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்திடல் வேண்டும்'' என்கிருர்.

நமது வாழ்க்கை, எந்நிலையிலும் அமைதியாக—அழகாக நடைபெறுவதற்கு நமது நற்செயல்களும் நல்லொழுக்கமும் தான் தலையாய காரணமாகும். இவற்றை விடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமைகள் பல புரிவதாலும், தன்முனைப்பால் தலை தூக்கி நிற்பதாலும், தகாத வார்த்தைகளால் பிறர் உள்ளங்களைச் சுடுவதாலும், செய்யத்தகாத குற்றங்களைச் செய்வதாலும் தமக்கு ஒரு பெருமை உண்டு என்றும், அதனுல் பெரியதொரு மேம்பாட்டு நிலையினை அடைந்துவிடலாமென்றும் நினைக்கிறவர்கள் உண்டு. அவர்களின் கண்மூடி எண்ணங்கள் எல்லாம், ஓர் நாள் மண்மூடிப்போய் மனம் நொந்து வாடவேண்டி வருமே என்பதையும், அத்தகைய மருள் வாழ்விலிருப்போர் தங்களின் போக்கை மாற்றிக்கொண்டு மறுவாழ்வு பெறலாமே என்பதையும் மக்கள் கண்ணுர நீர்மல்கி கடவுள் நினைவு எனும் கருத்தின்றி, கனிவின்றி கண்டவாறு வாழ்கின்ருர்களே என்பதையும் "பண்ணுத தீமைகள் பண்ணுகின்றீரே, பகராத வன்மொழி பகருகின்றீரே, நண்ணுத தீயினம் நண்ணுகின்றீரே, நடவாத நடத்தைகள் நடக்கவைத்தீரே, கண்ணுகக் காண்கின்ற கருத்தினை நினைத்தே கண்ணுர நீர்விட்டு கருதறியீரே, எண்ணுதது எண்ணவும் நேரும் ஓர்காலம், எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே" எனும் பாடலால் தமது வாட்டத்தை வெளிப்படுத்தி வேண்டுகின்ருர் வள்ளலார்.

---

## எண்ணங்கள்

துக்கப்படுகிறவனுக்கு தியானம் ஆறுதலை அளிக்கிறது.

வேலை முடிந்தவுடன் திரும்பிவிட்டால் காலம் விரயம் ஆகாது.

செய்யத் தெரியாவிட்டால் பார்த்துக்கொண்டே இருந்தால் வழி விடும்.

நீர் எப்படி செய்தாலும் உமதுவேலை பூர்த்தியாகிவிடும்; ஆனுல் அது எப்படியாவது இருந்துவிட்டால் அதற்கு மார்க்கெட்டில் இடம் இராது.

ஒவ்வொரு பொன்மொழியும் ஒரு சித்திரம். அது எப்படிப் பார்த்தாலும் நம்மையே பார்க்கிறது.

கரியைத் தொட்டால் கரிதான் ஒட்டும்.

நீ இன்னொருவன் தயவை நாடிக்கொண்டே இருந்தால் அவருக்கு தாளம் போட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். உம்முடைய தாளம் அவருக்கு சரியாக இல்லாவிட்டால் அவர் பாடவே மறுத்துவிடுவார். —என். கே. எஸ். மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவன் செயல்

புலவர் விசூர்மாணிக்கம்—மாளும்பதி—தமிழ்நாடு

'வணக்கம் சுவாமி'

'ஓ...வடிவேலனு? வாப்பா வா....என்ன சௌக்யமா?'

'கடவுள் அருளாலும், உங்க ஆசியாலும் பூரண சௌக்யம் சுவாமி. இருந்தாலும் எங்க ஊர்மக்கள் எல்லாரும் இப்பத்தான் நிம்மதியோடு தூங்கருங்க'

'அது என்னப்பா....அப்படிச் சொல்லறே.'

'ஆமாம் சுவாமி....ஒரு மாதமா உலகத்தையே ஆட்டிப் படைச்ச, அஞ்சி நடுங்க வைச்ச ஸ்கைலாப் கடலில் விழுந்து போயிடுச்சி அல்லவா? அது வீழ்ந்த பின்னர் தான் ஊர்மக்கள், ஏன் உலக மக்களே கூட என்றுசொல்ல லாம், அனைவருமே நிம்மதியா கட்டையே கீழே போட்டாங்க. அதுவரைக்கும் அப்பப்பா.... அவங்க பட்டபாடு இருக்கே....' 'அப்படியா தம்பி'

'அதையேன் கேக்கறிங்க சுவாமி....எங்க ஊர்லே ஏழைங்ககூட ஒருவகையில் நிம்மதியா இருந்தாங்க ஏன்னு பாழாய்ப்போன வயிற்றை வளர்க்க அன்றாடம் உழைச்சி உழைச்சி ஓடாத் தேயறதைவிட ஒரேயடியா செத்துப் போறது மேலுன்னு நினைச்சாங்க. ஆனு இந்தப் பணக் காரங்க இருக்காங்களே....அதுவும் அநியாய வட்டிவாங்கி.... கொள்ளை லாபம் அடிச்சி—கலப்படம் செய்து பணத்தைச் சேத்தவங்க இருக்காங்களே....அப்பப்பா.... அவங்கதான் ரொம்ப ரொம்ப விநாடிக்கு விநாடி செத்துச் செத்துப் பிழைச்சாங்க.'

'தம்பி....கேக்கறதுக்கு கதை மாதிரி இருக்கே'

'கதை மாதிரி என்ன சுவாமி.... கதையேதான். கேளுங்க. ஒரு சிலருங்க பணத்தை எடுத்துக்கிட்டு நகரத்துக்கே ஓடிட்டாங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அங்கே மட்டும் விழாதா தம்பி'

'அது என்னவோ அவங்க நினைப்பு அது மாதிரி தனி பஸ்ஸே வச்சிக்கிட்டு பெரிய பணக்காருங்க ஊரைவிட்டே போயிட்டாங்க சுவாமி.'

'வேடிக்கையா இருக்குப்பா கேக்க.'

'ஆமாம் சுவாமி. மாடு கன்றெல்லாம்கூட அப்படியே விட்டுட்டு ஓடிட்டாங்க.'

'பிறகு என்ன ஆனுங்க தம்பி. அப்பறம் எப்ப வந்தாங்க'

'கேளுங்க சுவாமி....அவங்கள்ளாம் ஓடிட்டாங்க. பிறகு, நாங்க ஒரு பத்து வீட்டுக்காரங்கதான் இருந்தோம். 'அப்படியா தம்பி...?' 'ஆமாங்க சுவாமி. நாங்களும், மத்தவங்களும் எல்லாமே சேர்ந்து கோயிலுக்குப் போய் அபிஷேகஞ் செய்து ஆண்டவனை அன்றாடம் வேண்டிக்கிட்டு வருவோம்.' 'ரொம்ப நல்லது செய்திங்க. அவன் தானே துணை'. 'வேறு யாருங்க சுவாமி....துணை. பணக்காரங்க தான் தாங்க மட்டும் புழைச்சா போதுமுனு விட்டுவிட்டு ஓடிட்டாங்களே. ம்.. அவங்களெ நம்பினு அவ்வளவுதான். ஆண்டவனை நம்பினு வீண் போகாதே சுவாமி.' 'நிச்சயம் வீண் போகாது தம்பி. அவன் கைவிடவே மாட்டான். காப்பாற்றுவான்.'

'ஆமாம் சுவாமி. சொன்னமாதிரி அவன் கைவிடாம காப்பாற்றிட்டான். பணக்காரங்க பணமிருக்குது, ஓடிட்டாங்க ஏழைங்க எங்க ஓடுவாங்க? சாமியே சரண மின்னு கிடந்தாங்க. அவங்க நம்பிக்கை வீண் போகலெ.' 'ஒருக்காலும் வீண்போகாது தம்பி. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' வீண் போகலே சுவாமி. கேளுங்களேன்' 'சொல்லுப்பா' 'நாங்கள்ளாம் கோயிலுக்குப் போய் பூஜை செய்து பாட்டுப் பாடிக் கொண்டு சற்று நேரம் இருந்துவிட்டு வருவோம். நாங்க வேண்டிய படியே நடந்துது சுவாமி.' என்ன வேண்டினிங்க....எப்படி வேண்டினிங்க' 'எங்க வேண்டுகோளை இதோ பாடுகிறேன் கேளுங்க சுவாமி.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கண்ட தெய்வ மான
கடவுளே! முருகா! அந்த
விண்கலம் மண்ணில் வீழ்ந்து
வேதனைப் படுத்தா வண்ணம்
கண்ணிமை போல நீயும்
காத்திட வேணும்; எங்கள்
அண்ணலே! உயிர்கள் தம்மை
ஆதரித் தருள்செய் வாயே!

அண்ணலே! முருகா எங்கள்
அமுதனே! உன்னை யல்லால்
மண்ணிலே துணைவே றுண்டோ?
மாமயில் வீரா! அந்த
விண்கலம் தன்னால் மாந்தர்
வேதனை எய்தா வண்ணம்
தண்கடல் தன்னில் வீழ்த்தித்
தரையுயிர்க் கருள்செய் வாயே!

எண்ணிலா உயிர்கள் யாவும்
இளைய வேல் முருகா! உன்றன்
வண்ணநற் குழந்தை யன்றோ
வடிவேலா! வந்தே யந்த
விண்கலம் மண்ணில் வீழ்ந்து
வெந்துயிர் மடியா வண்ணம்
கண்ணனின் மருகா! நீயும்
காத்தருள் செய்கு வாயே

'ஆச்சரியமா இருக்கே தம்பி! ஒரு வாரம் முன்னதாகவே இதுபோல வேண்டினதுக்கு ஏற்ப அது கடலிலேயே போய் விழுந்து தேப்பா.'

'உடம்பெல்லாம் புல்லரிக்குதுங்க, சுவாமி.... சொல்லி வைச்சமாதிரி நடந்ததெ நினைச்சா உள்ளமெல்லாம் உருகுதுங்க.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தம்பி... அவன் கண்கண்ட தெய்வமாச்சேப்பா. கலி யுகத்தும் வரதனுச்சேப்பா. கைவிடுவானு? கேட்டமாதிரி யே செய்துட்டானேப்பா. ம்.. !

'ஆமாம் சுவாமி....கடலிலே கொண்டு போய் அதனைத் தள்ளுன்னு வேண்டினேப. அப்பகூட கப்பல், படகு இல்லாத இடமா இருக்கணும்னு கேட்டுக்கிட்டோம்?

'உங்க கருணையே கருணையப்பா. அதுவும் இந்தக் காலத் துலே அப்படி வேண்டறதே அபூர்வம். எது எப்படியா வது போகட்டும். நாம்ப பிழைச்சா போதுமுன்னு நினைக் கற உலகத்துலே நீங்க இப்படி வேண்டினது ரொம்ப பாராட்ட வேண்டிய விஷயம்பா.'

'நாமெல்லாம் வாழணும் சுவாமி. உள்ளுவது எல்லாம் உயர்வா இருக்கணும்னு வள்ளுவன் சொன்னுனே சுவாமி!

'தம்பி.... வள்ளுவன் சொன்னு என்ன? வேறு யாரு சொன்னு என்ன? சுயநலம் ரொம்ப வளர்ந்த உலகத்துலே உண்மைக்கும், பொதுநலத்துக்கும் ரொம்ப ஆபத்து வந்துடுத்துப்பா.'

'என்னவோ சுவாமி... பருந்துக்கு மத்தியிலே பச்சைக் கிளி வாழுறமாதிரி ... கோட்டான்களின் மத்தியிலே குயில் கள் வாழுற மாதிரி நாட்டில் தீயவர்கள் மத்தியிலே தூய வர்களும் வாழ்ந்து கொண்டுதான் வருகிறு ர்கள்?

'இது என்னப்பா மெதுவா சொல்ற. அந்த நல்ல வங்க ஒரு சிலராவது இருக்கிறதனுலேதான் உலகமே இயங்கி வருதுன்னு அதே வள்ளுவன் சொல்றன் தம்பி'

'ஆமாங்க சுவாமி.... அந்தக்குறள்கூட.... அடடே! நெஞ்சிலே இருக்கு வரலியே....'

'அதான் தம்பி.... 'பண்புடையார் பட்டுண்டு உலகம், அஃதின்றேல் மண்புக்கு மாய்வது மன்' என்பது.

'ஆமாங்க சுவாமி....சமயத்துலேவரமாட்டேங்குதுங்க.'

'எல்லாம் வரும்பா. நல்லா படிக்கணும். மேலும், கடவுள் பக்தி வளரணும். உன்னைப் பார்த்தாலே எனக்கு ரொம்ப பிடிக்குது தம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏன் சாமி' 'அதுதான் தம்பி... இந்த சின்ன வயசுலே —அதுவும் இளமை ஊஞ்சலாடுகிறதுன்னு சொல்லற இந்த வயசுலே ஆண்டவன் பத்தியோட எல்லாருக்காகவும் வேண்டிக்கிற பண்போடே உன்னைப் பார்க்கிறதுலே ரொம்ப மகிழ்ச்சியா இருக்குதுப்பா. தம்பி! 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' நிச்சயம் நம்பு. மனம் தளராதே. வேண்டுவார் வேண்டுவதே ஈவான் அவன், கவலைப்படாதே. கடவுளை நினை. எல்லாம் அவன் செயல்.

'வணக்கம் சுவாமி....போய் வருகிறேன். ரொம்ப நன்றிங்க. 'போய் வாப்பா ... அடிக்கடி வரணும்' 'சரிங்க சுவாமி'.

---

## ஆத்ம சமர்ப்பணம்

இறைவனின் திருவுள்ளத்திற்கு நிபந்தனையின்றி முற்றிலும் பணிவதே ஆத்ம சமர்ப்பணமாகும். அவரது சித்தம் ஒன்றே மெய்யாக உள்ளதும், உண்மை என்பதும் நிச்சயமாக அறிந்துகொள். அவருடைய சித்தம்தான் நம்மைத் தூண்டுகிறது. செயல்படச் செய்கிறது. வழி காட்டுகிறது. நடத்திச் செல்கிறது. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும் எல்லா பிராணிகளிலும், மற்றும் எல்லா ஜீவராசிகளிடத்திலும் அவருடைய சித்தம்தான் செயல்படுகிறதென்பதை எப்பொழுதும் அறிந்துகொள். உன்னுடைய சொல் செயல், சிந்தனை யாவும் உன்னுள் உறைந்துகொண்டிருக்கும், உன் சரீரம் முழுவதிலும் பரவியிருக்கும் தெய்வீக சக்தியின் சொற்களே, செய்கைகளே, எண்ணங்களே. நன்மையே பயக்கின்ற, எப்பொழுதும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற அன்பு மயமான சர்வவல்லமை பொருந்திய நித்திய சக்தியின் ஆட்சியின்கீழ் நீ முழுவதும் உட்பட்டு இருக்கிறாய் என்பதை அறிந்துகொள்.

முற்றிலும் பூரணமான சரணாகதி அடைவதற்கு இறைவனிடத்தும் அவரது திருவுள்ளத்திடத்தும் அசைக்க முடியாத திட நம்பிக்கைவேண்டும். இதற்கு சற்றும் குறைவாக இருக்கக் கூடாது. அவரிடத்தில் முழுவதும் தஞ்சம் அடை. எல்லா பயத்தையும், எல்லா கவலைகளையும் எல்லா சந்தேகங்களையும் மற்றும் பலஹீனமான எல்லா எண்ணங்களையும் அகற்றிவிடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை விளக்கம் (5)

அமரர் து. குமாரசாமி-மீடான்

வாழ்க்கை மிகச் சிறப்புடையது. உன்னத பதவி யொன்றை அடைவதையே நோக்கமாகக் கொண்டது. அவ்வித வாழ்க்கையில் பழக்க வழக்கங்கள் என்பது ஒரு குறிப்பிட்ட அளவுவரை உதவி செய்வதாக இருக்கின்றது. என்றாலும் அப்பழக்க வழக்கங்களுக்கு எப்பொழுது மனிதன் அடிமையாவதற்கு ஆரம்பிக்கின்றானோ அப்பொழுதே அவன் முன்னேற்றம் தடைப்படுகிறது. உதாரணமாக பாதையில் "இடதுபுறமாகச் செல்ல வேண்டுவது" வழக்கம் என்றால் அவ்வழக்கம் பிரயாணியின் நன்மையைக் கருதிய ஒன்று.

ஆனால் அவசிய சந்தர்ப்பங்களில் அவ்வழக்கத்தை அசட்டைசெய்யாவிட்டால் நாம் எந்த இடத்தை நோக்கிப் போகிறோமோ அவ்விடத்தை அடைவதில் அனாவசியமான தாமதமுண்டாகும். இன்னும் பாதையில் போகும் மனிதன் பலவிதமான சாமான்களை சுமந்து கொண்டு போகும் பொழுது அச்சாமான்களில் பல எதற்கும் உபயோகமுள்ளவையல்ல என்பதைத் தெரிந்தவுடன் அவைகளைக் கழித்து விடுவான் என்பது திண்ணம். இன்றேல் சுலபமாகவும் சௌகரியமாகவும் தன்வழிப் பிரயாணத்தை முடித்துக் கொள்ளமுடியாது.

அது போன்றே உண்மையாகவே பிரயோசனப்படாத பல 'பழக்க வழக்கங்கள்' 'கிரியைகள்' 'சடங்குகள்' என்னும் மூட்டைகளையும் முடிச்சுகளையும் வீணே ஏன் சுமக்க வேண்டும்? ஆனால் அவைகளைக் கைவிடுமுன் உண்மையான பிரயோசனமுள்ளவை எவை? பிரயோசனமில்லாதவை எவை? என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். இதற்கு ஆழ்ந்த சிந்தனை வேண்டும். நல்ல பகுத்தறிவு வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தமிழ் நாட்டு பண்டைய நூல்களாகிய புராணங்கள் உபநிஷத்துக்கள் முதலியவைகளில், பகுத்தறிவுக்குச் சற்றும் பொருந்தா அநேக விஷயங்களும், அசங்கிதமான முறையில் எழுதப்பட்ட பலதும், நம் பகுத்தறிவிற்கு எட்டாத ஆழ்ந்த கருத்தைக் கொண்டுள்ள பல விஷயங்களும் நிரப்பியிருக்கின்றன என்பது உண்மையே. இதனால், சிலர் குற்றங்காணவேணும் நோக்கத்தையே கொண்டவர்களாய் ஏதோ தாங்கள் ஆராய்ச்சி செய்கின்றதாகக் கூறிக்கொண்டு மேற்கூறிய நூல்களில் காணப்படும் அநேக அழகிய விஷயங்களை அறவே ஒதுக்கி விட்டு, அவைகளில் காணப்படும் ஊழல்களை மட்டும் குறிப்பாக எடுத்துக் கொண்டு அவைகளைப்பற்றிய விரிவுரைகளும், கேள்விகளும் அமைத்து இகழவும், தர்க்கிக்கவும் செய்கின்றார்கள். இம்முறை நன்மையானதல்லவெனத் துணிந்து கூறலாம்.

ஒரு விஷயத்திலுள்ள குற்றங்களை விளக்கும் பொழுது அதன் குணங்களையும் விவரிக்க வேண்டுவது அறிஞர்கள் கடமை. அதனை விடுத்துக் குற்றங்களை மட்டும் பொறுக்கி எடுத்து ஆராய்வதனால் உண்டாகும் நன்மையுமில்லை. அது அறிவாளிகள் ஒப்புக்கொள்ளக் கூடியதுமில்லை. எத்தனைய அழகிய ஒரு விஷயமேயானாலும் அதிலுங் குற்றம் காணக்கூடிய சில அம்சங்களில்லாமலிரா. உதாரணமாக ஒரு நந்தவனத்தினுள் செல்வோமேயானால் அங்குள்ள அழகிய புஷ்பங்கள், செடிகள், முதலியவைகளின் இன்பமான காட்சியும் இளந்தென்றலும் இனிமையான மணமும் மனதை பரவசப்படுத்தும். ஆனால் நந்தவனத்துள் பிரவேசிப்பவர், புஷ்பச்செடிகளில் காய்ந்த சருகுகள் இருக்கின்றன. அவை அழகைக் கெடுக்கின்றன. ஆக அப்புஷ்பச் செடிகளை அறவே பிடுங்கி எறிந்திட வேண்டுமெனக் கூற முற்படுவது போலாகும், குற்றங்களை மட்டும் எடுத்துக்கொண்டு குணங்களை ஒதுக்கும் முறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமதம் மிகவும் உயர்வானதெனக் கொண்டாடித் துதிப்பதிலும், பெருமைபேசிக்கொள்வதிலும் நாம்தோல்வி அடைகிறோமில்லை. ஆனால் உண்மையை உணரும் விஷயத்தில் வெகுதூரம் இருக்கின்றோம். நமது மதத்திலிருந்து உண்மைகளைத் தெரிந்து நாம் ஞான முதிர்ச்சியடைந்து சத்தியத்தைக் கடைப்பிடித்து உய்யவும் வகையின்றி தெரிவிக்கக்கூடாத விஷயங்களை மதம் என்னும் தொட்டியில் நிரப்பிவிடுகின்றோம்.

மற்றைய மதத்தினர்களின் நூல்களைக் காட்டிலும் நம் இந்து மதத்தில் ஞான சாதனைகளுக்கான நூல்கள் பல இருக்கின்றன. இருந்துமென்ன? அவைகளால் நாம் அடையும் பயன் மிகவும் சொற்பம். "இந்தியாவில் ஞானம் என்னுங்கனிகளை அளிக்கக்கூடிய விருட்சம் இருக்கின்றது. அவ்விருட்சத்தின் கனிகளின் சுவை கண்ட மேல் நாட்டவர்கள் அவைகளைப் புசித்தும், அக்கனிகளின் அருஞ் சுவையைப் பற்றியும் நன்மையைப் பற்றியும், தங்கள் தேயத்தார்கட்கு எடுத்துரைத்தும் நன்மையடைகிறார்கள். ஆனால் நாமோ அக்கனிகளின் மேற்றோலை மட்டும் புசிக்கின்றோம்" என்றார் ஒரு பெரியார். இதன் ஆழ்ந்த கருத்தை நன்கு சிந்தியுங்கள். "மேல் நாட்டார்கள் நம்நாட்டு விருட்சத்தின் கனிகளை எவ்வளவு சிறப்போடு கொண்டு செல்கிறார்கள் என்று பெருமையாகக் கூறிக்கொண்டு கனியின் தசையைத் தள்ளி விட்டு மேற்றோலை மேலும் மேலும் புசிப்பதில் திருப்தி அடைகின்றோம். இதைக் கண்ணுறும் ஒரு சாரார் கனியின் உண்மைச் சிறப்பைப் பற்றிக் கூறுவதற்குப் பதிலாக "மக்கள் அறிவீனமாக பண்டைக் காலத்திய ஒரு மரத்தையும் அதன் கனிகளையும் கட்டிக்கொண்டு அழுகின்றார்கள். ஆகவே வாருங்கள் தோழர்களே! அவ்விருட்சங்களையே நாசமாக்கிவிடுவோம் எனக்குதித்தெழுகின்றார்கள். என்ன அழகு! ஒரு தொட்டியில் ஜலத்தை நிரப்பி அதில் தன் குழந்தையை உட்கார வைத்துக் குளிப்பாட்டிய ஒரு மாது தொட்டியிலுள்ள ஜலம் அசுத்தமானவுடன் ஜலத்தோடு குழந்தையையும் வீசி ஊற்றிவிட்டனளாம். அது போன்று இருக்கின்றது இச் செய்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குளத்தின் ஜலம் ஆரம்பத்தில் எவ்வளவு சுத்தமாக இருந்த போதிலும் எத்தனை வழிப்போக்கர்களின் கடுமையான தாகத்தைத் தீர்த்து வைத்து ஆனந்திக்கச் செய்திருந்தாலும் அழுக்குப் படிந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் தேகத்தை தன் குளிர்ந்த ஜலத்தைக் கொண்டு சுத்தப்படுத்திக்கொள்ள பயன்பட்டிருப்பினும் இன்னும் எத்துணை நற்காரியங்களுக்கெல்லாம் அக்குளத்தின் ஜலம் உபயோகப்பட்டிருப்பினும் போக்கில்லாத அந்நீரின் கதி என்னவாகும்? நாளடைவில் அசுத்தமும், மலமும், சேறும், விஷக்கிருமிகளும், சகிக்கொணாத் துர்நாற்றமுங் கொண்டு மிளிரும் என்றாலும் ஒரு காலத்தில் உண்மையாகவே இக்குளத்தின் ஜலம் விசேட குணமும் உபயோகமும் பொருந்தியனவாக இருந்தமையால் நாம் இன்னும் அதையேதான் உட்கொள்ள வேண்டும். அதிலேயே ஸ்நானம் முதலிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கூறுவது பொருந்துமா? பொருந்ாதென்பதை ஒரே மூகமாக ஒப்புக்கொள்வீர்கள்! அஃதே போல் ஒரு காலத்தில் உண்மையாகவே பலருக்கு ஆறுதலும் ஆனந்தமும் அளித்த சடங்குகள், ஆத்ம விடுதலைக்கு சாதகமாயிருந்த தெய்வ வழிபாட்டின் முறைகள், மனிதனைப் பரிசுத்த வாழ்வில் லயித்திருக்கச் செய்த இன்னும் பல, நாளடைவில் மனிதர்களின் அஜாக்கிரதையினாலே சீர்கெட்டுப் போயிருக்க "இல்லை–இல்லை என்ன சொன்னாலும் அவை மாற்றப்படக் கூடாது'' என்பது சரியாமோ?

போக்கில்லாத குளத்துநீர் கதியையே பண்டைய சடங்குகள், பழக்க வழக்கங்கள், முதலியன இன்று அடைந்திருக்கின்றன. மக்கள் மனோநிலைக்கும், அறிவு நிலைக்கும் தக்கவாறு அவைகளை அமைக்கப்பட்டாலன்றி நன்மை பயக்கமாட்டா. குளத்தின் ஜலத்தினால் அக்குளத்திற்குச் சிறப்பு. அக்குளம் எக்காலமும் குன்றாப் புகழுடையதாக இருக்கவேண்டுமெனில் என்ன செய்ய வேண்டும்? ஜலம் கெட ஆரம்பிக்கு முன்னமே அதனை இறைத்துவிட்டு சுத்த ஜலம் நிரப்பச் செய்ய வேண்டும். அக்குளத்தை மூடிவிட்டு வேறொன்று தோண்ட வேண்டும் என்பது அனாவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோலவே நம் இந்துமதம் என்னும் சநாதன தர்மக்குளம் பழக்கவழக்கங்கள், மூட நம்பிக்கைகள் என்னும் குப்பைகள், அசுத்தங்கள், மகாகொடிய விஷக்கிருமிகள், நச்சுப்பாம்புகள், முதலியனகொண்டுமிளிர்கின்றதென்றால், அதன் ஜலம் தற்போழ்துள்ள நிலைமையில் கொடிய நாற்றம் வீசுகின்றதென்றால் என்ன செய்ய வேண்டும்? அதனைச் சுத்தப்படுத்தி பரிசுத்தமான புதிய ஜலம் அதன் ஊற்றிலிருந்து கொந்தளிக்கச் செய்யவேண்டும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய் பல சித்தர்களால், பல பெரியார்களால் வணக்கஞ் செய்யப்பட்ட உண்மையான 'சநாதன தர்மம்' என்னும் ஊற்றுப்பெருக்கெடுத்தமாயின் சாதிச்சண்டை, சமயச்சண்டை இவைகள் தலை குனியமாட்டாவா? பால்ய விவாகம், பெண்ணடிமை, தீண்டாமை என்னும் நெஞ்சிரக்கமற்ற வஞ்சகப் பேய்கள் நாசமாய்ப் போகவா? அன்பிற்கே அழிவைத்தேடும் அறியாத்தன்மையினுல் உதித்த அனியாய மூடநம்பிக்கைகள் முற்றும் ஒழிந்துபோகவா? அப்பால் பொறாமை எது? துவேஷம் எது? சுயநலம் எது? நான்வேறு நீ வேறு என்பதேது? அக்காலம் என்றுதான் வருமோ? மக்கள் மாசற்ற மேம்பட்டவாழ்க்கையில் ஒன்றுபட்டின்புற்றிடும் நாள் எந்நாளோ?

ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்களே! சகோதரிகளே! சகோதரர்களே! இச்சிறு கட்டுரையின் வாயிலாகக் கூறப்படுவனவற்றைக் கண்மூடித்தனமாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது இச்சிக்கப்படவில்லை. அதற்கு மாறாக இவ்விஷயங்கள் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்படியாகவே கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உலகம் வெகு தீவிரமாக முன்னேறிச் செல்கின்றது. நாம் நினைப்பதைவிட அதிவிரைவில் முன் சென்றுகொண்டே இருக்கின்றது. அயல்நாட்டார் சம்பந்தங்கள் குறையாக உள்ள நாடுகள் இயற்கையாகவே மந்தமாக இருப்பினும் ஒவ்வொருதேசத்தினரும் மாறுதலடைந்துகொண்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றனர். நம் தாய்நாடாகிய தமிழ்நாடு முன்னேறுகைக்கான தீவிர முயற்சியில் இருக்கின்றது. அதற்கேற்ப நாமும் நம் கடமைகளைச் செய்தல் வேண்டும்.

இச்சுமாத்ரா தீவோ ஏறக்குறைய எல்லாத் தேசத்தினரும் குழுமியுள்ள சந்தை போன்றது. பற்பல சாதியினரும் நம் கண்முன்பாகவே நன்மைக்கோ தீமைக்கோ வழிகோலுவதைக் காண்கிறோம். இதனால் நம்மைச் சுற்றியுள்ளவர்களைப் பார்த்தாகிலும் நாம் நமது முற்போக்கிற்காக வேண்டியனவற்றைச் செய்வதில் அலட்சியமாக இருத்தல் கூடாது. இது விஷயத்தில் இவ்வூரில் உள்ள சொற்ப தமிழர்களாகிய நாம் நம் தாய்நாட்டுச் சகோதர சகோதரிகளை விட நல்ல சந்தர்ப்பத்தை உடையவர்களாக இருக்கின்றோமென்பது உண்மை.

முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் கடவுள் நம்பிக்கையை ஒழிக்க வேண்டும் என்று கூறவரவில்லை. அதே சமயத்தில் கண்மூடித் தனமாகக் கடவுள் பெயரினால் அநாகரிகமான அறிவுடையோர் இகழ்வதற்குரிய பழக்க வழக்கங்கள் புரியப்படுவதையும் ஆமோதிக்கவில்லை. இவை இரண்டிற்கும் பொதுவாக "கடவுள் என்பது என்ன? அதனை எதற்காக வழிபடுவது? எவ்விதம் வழிபடுவது?" என்னும் மேலான விசாரணையில் ஊக்கத்தோடு பிரவேசிக்கும்படியாகவே கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

பொய், களவு, காமம், கோபம், கொலை, வஞ்சகம், அகங்காரம், சூதாடல், மதுபானஞ் செய்தல், புலால் உண்ணல் முதலிய தீயவைகளைக் களைந்து பரிசுத்தமான வாழ்விலீடுபடவேண்டுமாயும், வேற்றுமையின்றி, ஏற்றத்தாழ்வின்றி, ஒற்றுமையுடன் ஒருதாய் வயிற்றின் குழந்தைகள் போல் வாழவேண்டுமாயும், சுருக்கமாக ஒவ்வொருவரும் சன்மார்க்கத்தில் பிரவேசிக்கும்படியாகவும் விண்ணப்பித்துக் கொள்ளப்படுகிறது. இதுவே வாழ்க்கை முறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையாமை

திருமதி. உமாதேவி பத்மநாபன்
அரியநகர்-புதுவை

நீர்மேற் குமிழி போன்றதே இவ்வுலக வாழ்க்கை! ஆனால் அதனையறிந்தோர், உணர்ந்தோர், உணர்ந்து வாழ்வோர், மிக மிகச்சிலரேயாவர். மானிட உடலும் மனித வாழ்வும் நிலையற்றவை என்பதைப் பலர் உணர்வதில்லை. "வாழ்க்கை வாழ்வதற்கே!" என்ற சித்தாந்தத்தின்படிபலர் வாழ்கின்றனர். சிலர் இப்படித்தான் வாழவேண்டும் என்று தம்முள் வரையறை செய்து கொண்டு அதன்படி வாழ்கின்றனர். பலர் எப்படியும் வாழலாம், எல்லாம் மனிதன் அனுபவிப்பதற்குத்தான் என்று கூறுவதோடு, மது, மாது, மாமிசம், புகை குடித்தல், சூதாடுதல், போன்ற எல்லாவற்றிலும் ஈடுபட்டுத் தாறுமாறாய், மனம் போனபடி வாழ்கின்றனர். இத்தகையவர்களின் வாழ்க்கை பிரேக் இல்லா வண்டியைப் போன்றது. தாறுமாறுப் பலர் போகும் பாதையில் ஓடும் வண்டி, பெருத்த சேதங்களை விளைவிப்பதோடு, தானும் இறுதியில் அழிகின்றது. அதைப் போன்றுதான் தற்கால வாழ்வும் அதுவும் இளந் தலைமுறையினரின் வாழ்வும் உள்ளது. எப்படியோ வாழ்க்கை நடந்து கொண்டுதான் வருகிறது, காலமும் உருண்டு கொண்டு தான் இருக்கின்றது.

இந்தக்கால வாழ்க்கையில் பிரதான இடத்தைப் பெறுவது பணம். யாரைப் பார்த்தாலும் பணம்! பணம்! என்றுதான் பேசுகிறார்கள். அடித்துக் கொள்கின்றார்களே தவிர, மற்றவைகளைப் பற்றி ஒருபோதும் கவலைப்படுவது இல்லை. பணம் இருந்தால் போதும். அது எந்த வழியில வந்தாலும் சரிதான். ஒருவரை ஏமாற்றி மோசம் செய்த பணமாக இருந்தால் என்ன? அல்லது கொள்ளையடித்த பணமாக இருந்தால் என்ன? அதுவுமில்லாவிடில் ஒன்றுக்குப் பத்தாக விலை வைத்துக் கள்ளச் சந்தையில் விற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவித்த பணமாக இருந்தால் என்ன? ஏதோ பணம் நிறைய இருக்கிறது அல்லவா? பத்து மாடிக் கட்டிடங்கள் பலவற்றுக்கு ஏகபோக உரிமை இருக்கிறதல்லவா? பலவிதமான கார்கள் உள்ளதல்லவா? அவர்கள் தான் பெற்ற சாமியை விடப் பெரிய சாமியாக ஊருக்கு இருப்பார்கள். தடி எடுத்தவர்களும் இவர்களுக்குத் தாசானுதாசனாய் இருப்பார்கள். புத்தி கெட்ட எளிய மக்களும், வலியற்ற எளியவர்களும் மனச்சான்றின் மென்னியை முறித்துப்போட்டுவிட்டு அந்த பெரிய சாமியைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவார்கள்.

ஆனால் இவர்கள் ஒன்றை நினைத்துப் பார்ப்பது இல்லை. பார்க்கவும் மனமில்லை. அப்படி அவர்கள் நினைத்துப் பார்க்கத் தவறுவது எது? அது தான் நிலையாமை. செல்வமோ, வாழ்வோ, உடலோ நிலைக்காது என்பதையுணர்வதில்லை. செல்வம் சகடக்கால் போகிறது. நிலைமாறி வரும் தன்மையுடையது என்பதை நாம் அன்றாட வாழ்வில் கண்முன்னால் காண்கிறோம். ஆனால் அது புத்தியில் உறைப்பதும் இல்லை. மனதில் பதிவதும் இல்லை. அதைப் போன்றதே உடலும் அழகிய உடலாகக் காட்சி தரும் சதைப்பிண்டம். நோய் வாய்ப்பட்டால், அல்லது உலகை நீத்தால் அழுகிய உடலாகத் துர்நாற்றம் வீசும் மாமிசக் குவியலாக மாறுகின்றது. உடல் மட்டும் அப்படியே பழுதாகாமல் உள்ளதா? ஒரு நோய் வந்தால் உடல் பாதிக்கப் படுகின்றது. நோயின் தன்மைக்கேற்ப உடல் வடிவாலும், நிறத்தாலும், செயலாலும் பெரிதும் மாறுபாடு அடைகின்றது. நேற்று குழந்தையாக இருந்தவன், இன்று மனிதனாக மாறுகிறான். நாளை வயோதிகனாக முதிர்கின்றான். செல்வம் எப்படி நிலையற்றதாய் உள்ளதோ அதைப் போல் வாழ்வு மட்டுமல்ல, உடலும் நிலையற்றதாய் உள்ளது. பிறக்கும் போது, யாரும், எதையும் கொண்டு வரவுமில்லை. இறக்கும் போதும், யாரும், எதையும் கொண்டு செல்லவும் போவதில்லை. இதனை சிந்தித்து உணர்ந்தால், தெளிந்தால், இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள், பூசல்கள், கொலை, கொள்ளைகள், மோசடிகள், சுரண்டல்கள் நடக்க வழியேயில்லை.

வாழ்க்கைக்குப் பணம் அத்தியாவசியமானதுதான். ஆன்மீக வளர்ச்சிக்கும் பணம் தேவைதான். பணத்தால், பாகவதத்தைப் படித்துப் பக்தியை வளர்த்து மக்களை ஆத்திகர்களாக்கவும் முடியும்; அதே பணத்தால் பெருமாள் கோயிலை இடித்து, ஆத்திகர்களை நாத்திகர்களாக்கவும் முடியும். இது எப்படி என்று வியப்படைகிறீர்களா? ஒரு சிறு விளக்கைக் கொண்டு இருட்டை விரட்டியடிக்க முடியும். அதன் ஒளியில் நல்ல மெய்யறிவு நூல்களைப் படித்து ஆன்மவிசாரணையில் ஈடுபட முடியும். அதே விளக்கைக் கொண்டு, வீட்டையோ அல்லது

ஒரு ஊரையோ கொளுத்தி அழித்துவிட முடியும். அப்படிப்பட்டது தான் பணமும். அதனால் ஆக்கவும் வளர்க்கவும் செய்யலாம். அப்படிப் பட்ட வல்லமை படைத்ததுதான் பணம். அப்படிப்பட்ட சர்வ வல்ல மை பெற்ற பணம் வாழ்வுக்குத் தேவைதான், மறுக்க முடியாது. ஆனால் அளவுக்கு மேல் எதற்காக? நீரானது ஓடிக்கொண்டேயிருந்தால் தான் அதில் அழுக்குகள் கலந்தாலும் நீங்கி சுத்தமாக, தெளிந்ததாக, ஊரை, உயிர்களை வாழ்விக்க வல்லதாக இருக்கும். அப்படியின்றி ஓரே இடத்தில் தேங்கிக்கிடக்குமானால், நாளாவட்டத்தில் பாசிபிடித்து, அழுக்குப்படிந்து, உயிர்களுக்குத் தீமை செய்யும் கிருமிகளையும், புழு, பூச்சிகளையும், விஷஜந்துக்களையும் கொண்டதாக, பெருந்தீங்கு விளை விக்கக்கூடியதாக இருக்கும். அதைப்போன்றதே செல்வமும். தேவை யான பணம், தேவையான அளவில் மக்களுக்குப் பரவலாகக் கிடைத் தால், உலகத்தில் உள்ள துன்பங்களில் பாதிக்கு மேல் குறைய இட முண்டு. நாடும் ஓரளவு சுபீட்சமாக இருக்க வழியுண்டு. ஆனால் அதை யுணராமல் மேலும் மேலும் பணத்தைக் குவிக்க வேண்டும் பத்துத் தலைமுறைக்குத் தேவையான செல்வத்தை அடையவேண்டும். சொத்துக்களைச் சேர்க்க வேண்டும் என்றுதான் மேன்மேலும் பணம் சம்பாதிப்பதில் வெறியுடன் ஈடுபடுகிறார்களே தவிர பின்விளைவுகளைப் பற்றிச் சிறிதும் சிந்திப்பதில்லை. தம்முடைய சந்ததியினரைச் சோம் பேறிகளாக, உதவாக்கரைகளாக மாற்றிவிடுகின்றனர். "தேவையான சொத்துதான் இருக்கிறதே! நான் ஏன் உழைக்க வேண்டும்?" என்று கேட்கும் பிள்ளைகள் அதிகமாக உள்ளனர். அளவுக்கதிகமான செல்வம் முதலில் செருக்கையும், பிறகு அலட்சியத்தையும், இறுதியில் வீழ்ச்சி யையும் கொடுக்கின்றது. பெற்றோர்களையும் பெரியவர்களையும் அவமதிக்கச் செய்கின்றது. தீயவழிகளில் செல்ல இளந்தலைமுறை யினரைத் தூண்டுகின்றது. செல்லவும் வைக்கின்றது. பணத்தால் எதையும் சாதிக்கலாம். பணத்தால் தவறுகளை மூடிமறைத்துவிடலாம் என்ற எண்ணம் பரவலாக எழுந்து வலுப்பெற்றுவிடுகின்றது. இதனால் குடும்பப்பெரியவர்கள் வாழையடி வாழையாகக் கட்டிக் காத்துவந்த குலதர்மங்களும், குடும்ப கௌரவமும் குலைந்துபோய்விடுகின்றது. இது எதனால்? அளவுக்கு அதிகமான செல்வத்தால். அதுதரும் மட்டற்ற சுகத்தால், ஆடம்பரமான வெளிப்பகட்டுகளால். செல்வத் தால் நன்மை விளைவதற்குப் பதில் இங்கே தீமையே விளைகிறது. பலர் வாட, சிலர் வாழ செல்வம் சேர்ப்பதால் நாட்டிற்கும் நன்மையில்லை, செல்வத்தைச் சேர்ப்பவர்களுக்கும் நன்மையில்லை என்பது புலனாகிற தல்லவா?

பணம் சேர்ப்பது எதற்காக? மனைவி மக்களுக்காக என்றால் நியா யமே! தன்னுடைய இன்பதுன்பங்களில் பங்கெடுத்து நிற்கும் மனையாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிவரை காக்கும் கடமைக்காக தன்னுடைய தாய் தந்தையரைப் பேண வேண்டியதற்காக, தன்னுடைய மக்கட் செல்வங்களை நல் வாழ்க்கையில் ஈடுபடுத்துவதற்காக ஒருவன் சம்பாதித்தே யாகவேண்டும். பணம் சேர்த்தேயாகவேண்டும். இல்லாவிடில் இல்லறம் நல்லறமாக நின்று நிலவாமல், குருக்ஷேத்திரமாக மாறிவிடும். ஆனால் பலர் தன்னுடைய பேரன், பேத்திகளுக்கு, கொள்ளுப்பேரன்களுக்கு, அவர்களுடைய கொள்ளுப்பேரன் பேத்திகளுக்கு என்று சேர்க்கிறார்களே! இது தேவையா? என்றுதான் சிந்திக்க வேண்டும்.

நாம் நிலையாக இருப்போமா? அல்லது யாருக்காகப் பணம் சேர்க்கிறோமோ அவர்கள் நிலையாக இருப்பார்களா? என்பதை நாம் ஒரு கணம் சிந்திக்க வேண்டும். யாருக்காகப் பணம் சேர்க்கிறார்களோ அவர்கள் இவற்றையனுபவிக்காமல் இவர்களுக்கு முன்பே திடீரென்று நோய்வாய்ப்பட்டோ, விபத்தில் அடிபட்டோ இறந்துவிடுவதும் உண்டு. அப்படி நிகழ்ந்துவிட்டால் சேர்த்த பணத்தால் யாருக்கு என்னபலன்? அவ்வாறன்றி நெருப்பால், புயலால், வெள்ளத்தால், இயற்கையின் மற்ற தாக்குதல்களால் சொத்துக்கள் அழிவதும் உண்டு. ஆக எப்படிப் பார்த்தாலும் நிலைப்பது நிலையானது பரம்பொருளைத் தவிர மற்ற எதுவுமேயில்லை என்று ஆகிவிடுகின்றது.

அவ்வாறு இருக்கும்போது, வாழ்க்கையை நல்லமுறையில் அனுபவிக்காமல் ஊண், உறக்கம், ஓய்வு, எதுவுமேயின்றி பணம் குவிக்கும் பெருநோக்கமே இலட்சியமாகக் கொண்டு பணத்தைச் சேர்த்தும், மேற்சொன்ன காரணங்கள் நிகழ்ந்தால் அதனால் மனவமைதயும் மகிழ்ச்சியும், இன்பமும் பறிபோனதுதான் மிச்சம். தன்னுடைய குடும்பம் நன்முறையில் வாழ்வதற்குத் தேவையான அளவு உழைத்துச் சம்பாதித்தால், சேமித்தால், எவ்வளவு நன்மைகளைத் தரும். அமைதியான, ஆனந்தமான, நிறைவாழ்வை அளவுடன் கூடிய உழைப்பும் அதனால் கிட்டும் ஊழியமும், அளவுடன் சேர்த்த சொத்தும் அளிக்கின்றன. ஆனால் அதனை நாம் அறிந்துகொள்கிறோமா? பாட்டாளி மக்கள் உடுத்த உடையில்லாமல், அல்லல்படும் போது செல்வந்தரின் வீட்டுச் சாளரங்கள் அயல்நாட்டுத் துணித்திரைகளைப் போர்த்திக் கொள்கின்றன. ஏழைகளின் பசிக்கு ஒருபிடி அன்னமளிக்கமறுக்கும் உள்ளம், தான் வளர்க்கும் நாய்க்கு உயர்வகை உணவளிக்கத் தயங்குவது கிடையாது. ஏழை கஞ்சிக்கு உப்பில்லையே, அடுத்தவேளை கஞ்சிக்கு வழியில்லையே என்று தவிக்கும் போது, அதற்காகப் படாதபாடுபடும் போது, செல்வந்தன் பாலுக்குச் சர்க்கரை இல்லையே, உயர்வகை மது பானங்கள் கிடைக்கவில்லையே என்று தவிக்கிறான். அப்படித் தவிப்பவன் நாளை நமக்கும் அவ்வறிய நிலை வருமென்றோ, அல்லது ஓடும் ஆறு திடீரென்று வற்றிவிடும் அல்லது தன் போக்கை மாற்றிக்கொள்ளும் என்றோ அறிவது இல்லை. இவர்களைப் போன்றவர்கள் உலகத்தை உணரவேண்டும். நிலையாமையைப்பற்றி தெளிவுகொள்ளவேண்டும். சிந்தித்து, தெளிந்து சீரிய வழியில் நடந்து செம்மைபெறவேண்டும் என்றுதானே ஞானியர்களும், சமயக்குரவர்களும் படாதபாடுபடுகின்றனர். அடியார்கள் அறிவுரை பகர்கின்றனர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ராமதாஸ் அருளுரைகள் (36)

## சுகமும்—துன்பமும் ஒன்றாக வரும்

தமிழ் வடிவம்:- ம. சி. சிதம்பரப்பிள்ளை

ஒரு மனிதன் ஒரு நெடுஞ்சாலையால் செல்லும் போது ஒரு குருடனைக் கண்டான். அந்த அந்தகனை அழைத்து அவனுக்கு ஒருவேளை உண்டி கொடுக்க வேண்டுமென எண்ணினான். தான் அவசரமாகப் போக இருப்பதால், அக்குருடனைப் பார்த்து ''நீ எனது வீட்டிற்குச் சென்று சாப்பிட்டுச் செல்'' என்று கூறிவிட்டுத் தனது வீட்டுக்குச் சென்று மனைவியை விழித்து, ''இரவுக்கு இன்னும் ஒருவருக்குச் சாப்பாடு கூடச் சமைக்கவும், ஒரு குருட்டு மனிதனை வரச்சொல்லிவிட்டு வந்துள்ளேன்'' என்றான். அதற்கு அவனது மனைவி, ''அப்படியாகில், இருவருக்குச் சமைக்க வேண்டும்'' என்றாள். அதற்கவன், ஏன்! அது எப்படி?'' என்றான். ''குருடன் தானாக எவ்வாறு எங்கள் மனைக்கு வர முடியும். துணைக்கு எப்படியோ இன்னும் ஒருவனை வழி காட்டியாக வரச் செய்வானல்லவா?'' என்றாள்.

இந்தச் சம்பாஷணை விளக்கத்தினால் அறியக் கிடப்பது, உலக சம்பந்தமான சந்தோஷம் எப்போதும் துக்கத்துடனேயே பின் முன்னாக வரும். உலோகாயதத்துடன் ஒன்றிய மகிழ்ச்சி வருத்தத்துடன் கலந்ததாகவே வரும். பஞ்சப்புலன்கள் மூலம் பெறும் மகிழ்ச்சி எங்களுக்குப் பூரணமாக ஒருபோதும் இருக்காது. இது எங்கள் ஒவ்வொருவரதும் அனுபவம்.

ஆகவே நாம் சுக—துக்கம் ஆகிய இவைகள் இரண்டையும் நீக்கி, அப்பால் செல்லவேண்டும். எமது உள் மனத்தை ஆழமாக நோக்கவேண்டும். என்றும் வற்றாத ஆனந்த ஊற்றை அறிய வேண்டும். ஒரு தெய்வீகம் நிறைந்த - ஒளிமயமான, இன்பமான பிரபஞ்சத்தைக் காணவேண்டும்.

மாதாஜி வாழ்க! சுவாமி ராமதாஸ் வாழ்க!
எங்கும் இன்பமே சூழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சிந்தனை

— ஸ்ரீகங்காதரன் - அரவிந்தாச்சிரமம் - புதுவை —

சென்ற இதழ் தொடர்ச்சி

## ஆத்மசாதனை

அவைகளை செய்கிறோம் என்பதைப் பொறுத்தே நம்முடைய முன்னேற்றம் அமைகின்றது. உண்மை ஞானியைத் தேடி சரணடைந்து அவருடைய திருவடிநிழலில் அருட்காப்பில் அவரால் நமக்கு அளிக்கப்படும் பணியைத் திரிகரண சுத்தியுடன் குருவுக்கு அர்ப்பணமாக செய்வதை விடச் சிறந்த சாதனை வேறொன்றுமில்லை.

அஷ்டாங்க யோக நியமங்கள் அதிதீவிர ஆத்மசாதனைகள்மூலமாகப்பெறும் எல்லாவிதமான ஆத்மீகப்பெறுபேறுகளையும் சத்குரு சேவை என்னும் மிக எளிய ஆத்மசாதனைகளின்மூலமாகவே உத்தம சாதனை அடைகிறன்.

*  *  *  *

நன்கு பண்படுத்தப்பட்ட நிலமே பயிர் செய்வதற்குத் தகுதியுடையதாக ஆவதேபோன்று அற ஒழுக்க சன்மார்க்க சமூக சமயவாழ்வின் மூலம் பரிபக்குவமடைந்த உள்ளமே யோக வாழ்க்கைக்குத் தகுதியுடையதாக ஆகின்றது சமய வாழ்க்கை இன்றுபோல வாழ்க்கை அசாத்தியமானதாகும். சமய வாழ்க்கை நம்மை ஆத்மீக வாழ்க்கைக்குத் தகுதியுடையவர்களாகச் செய்கின்றது. ஆன்ம பிராணாயாமம், ஜபம், தியானம், போன்ற சில குறிப்பிட்ட யோக நியமங்களைப் பின்பற்றுவதன் மூலம் சாதனையில் ஓரளவு முன்னேற்றமடைய முடியுமேயன்றி பூரண சித்தி சித்திக்காது. யோகத்தில் பரிபூரண சித்தியடைய அஷ்டாங்க யோக நியமங்கள் அனைத்தையும் பக்தி சிரத்தை நம்பிக்கையுடன் பின்பற்ற வேண்டும். சத்குரு சேவையின்மூலம் அஷ்டாங்க யோக நியமங்களின் பலன்கள் யாவும் இயல்பாகவே சித்திக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களும் கவிஞரும்

கா. கு. சண்முகம்—கோவை மாவட்டம்

கண்களின் அழகைப் பாடாத கவிகள் இல்லை எனலாம். ஏனெனில் கண்ணில் சிறந்த உறுப்பு வேறொன்று இல்லை. சிவபெருமான் கண்கள் அழகாக இருப்பதால் அவரை அங்கணன் என்று சொல்லுகிறார்கள். திருமாலின் கண்கள் தாமரை மலர் போன்று பெரிதாக இருப்பதால், அவரைப் புலர் தாமரைக் கண்ணன் என்று பாடியுள்ளார்கள். திருவள்ளுவரும் ஓரிடத்தில் 'தாமரைக் கண்ணன்' என்று குறிப்பிடுகிறார்.

பெண்களின் கண்கள் குவளை மலரைவிட அழகானவை என்று கூறவந்த வள்ளுவர்.

"காணில் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும்
மாணிழை கண்ஒவ்வேம் என்று"

எனக் கூறுகிறார்.

''கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம் இம் மூன்றும் உடைத்து''

இக்குறளில் பெண்களின் கண்களுக்குப் பெண்மானின் கண்களை உவமையாக்குகிறார்.

உமாதேவியின் கண்கள் மாவடுவை இரண்டாகப் பிளந்தால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறுள்ளதாக மணிவாசகர் கூறுகிறார்.

மாவின் வடுவகிர் அன்ன கண்ணி பங்கா''

—திருவாசகம்

மற்றவர்களை விடக் கம்பரே கண்களின் அழகை அதிகம் பாடியுள்ளார் எனக்கூற வேண்டியதில்லை. அவர் கவிச் சக்கரவர்த்தி ஆயிற்றே. கம்பரின் உவமை நயத்தையும், கற்பனைத் திறனையும் கண்டு ரசிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் ஆனபின் அவர்களிருவரையும் பார்த்தவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.

"நம்பியைக் காண நங்கைக்கு
ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணும் தோறும்
குரிசில்கும் அன்னதேயால்"

நம்பி–ராமன்
கொம்பு–சீதை

இராமனின் அழகைக்காண சீதைக்கு ஆயிரம் கண்கள் வேண்டும் என்றார். அதேபோல் சீதையின் அழகைக் காண இராமனுக்கும் ஆயிரம் கண்கள் வேண்டும் என்றார்.

## இராமனின் கண்கள்:

இராமனின் கண்கள் தாமரை மலர் போன்று இருந்ததாகக் கம்பர் கூறுகிறார்.

தயரதன் புதல்வன் என்பார்
தாமரைக் கண்ணன் என்பார்
புயல் அவன் மேனி என்பார்.
பூவையும் பொருவும் என்பார்."

இராமனை முதன் முதலில் பார்த்த சுக்கிரீவன் கண்களுக்கு இராமனின் கண்கள் குளிர்ந்த கண்களாகத் தெரிந்ததாகக் கூறுகிறார் கம்பர்.

'கண்டனன் என்ப மன்னோ
கதிரவன் சிறுவன் காமர்
குண்டலம் துறந்த கோல
வதனமும் குளிர்ந்த கண்ணும்'
காமர் – அழகிய

## குகனின் கண்கள்:

குகனின் கண்களில் கோபம் இல்லாத சமயத்திலும் தீப்பொறி பறக்குமாம்.

'சீற்றம் இன்றியும் தீ எழ –நோக்குவன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீதையின் கண்கள்:

சீதையின் கண்கள் வேலையும், கூற்றுவனையும் வெல்லும்படியாய் இருந்ததாகக் கூறுகிறார்.

'கொல்லும் வேலும் கூற்றமும்
என்னும் இவை எல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன
மதர்க்கும் விழி கொண்டாள்.'

வனத்தின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு ரசிக்கையில் இராமன் சீதையைப் பார்த்துக் கூறியதாவது:

''மயிலும், மானும் உன்னுடைய சாயலையும், கண்களையும் கண்டு உன் இனமென்று இங்கு வருவதைப்பார்.''

''கைநிறை நிமிர் கண்ணாய்
கருதின இனமென்றே
மெய்நிறை விரிசாயல் கண்டுநின்
விழிகண்டு
மஞ்ஞையும் மடமானும் வருவன
பலகாணாய்.''

கைநிறை நிமிர்கண் = உள்ளங்கை
அளவு அகன்றகண்

## சூர்ப்பனகையின் கண்கள்:

இராமனைக் காண வந்த சூர்ப்பனகையின் கண்கள் மிக நீண்டும், மின்னுவனவாகவும், இருண்டதாகவும் வாள் போன்றும் இருந்ததாகப் பாடுகிறார்.

'சேணுற நீண்டு மீண்டு
செவ்வரி சிதறி வெவ்வேறு
ஏணுற மிளிர்ந்து நாணு
விதம் புரண்டு இருண்டவாட்கண்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வரிசிதறி — உத்தம இலக்கணம் ஆகிய சிவந்த ரேகைகள் சிதறப் பெற்ற.

**பிற மாதர் கண்கள்:**

குகனுடன் பரதன் முதலியோர் படகுகளில் செல்ல அப்படகுகளில் இருந்த பெண்களின் கண்கள் வெருவிப் பாயும் கயல்மீன்களைப் போன்றிருந்தனவாம்.

''கலன்களின் வெருவிப் பாயும்
கயல்குலம் நிகர்த்த கண்கள்''

—கங்கைகாண் படலம்

**இராமன் மகுடம் சூடலைக்
காணவந்த மாதர் கண்கள்**

'குவளையின் எழிலும் வேலின்
கொடுமையும் குழைத்துக் கூட்டி
திவளும் அஞ்சனம் என்றேய்ந்த
நஞ்சினைத் தெரியத் தீட்டி,
தவள ஒண் மதியில் வைத்த
தன்மைசால் தடங்கண் நல்லார்''

மதியில் வைத்த—மதிபோன்ற முகத்தில் குவளை, வேல், மை இம்மூன்றையும் வைத்தது போன்று எனப் பொருள்.

**அரக்கியர் கண்கள்**

அசோக வனத்தில் சீதையைக் காவல் செய்துகொண்டிருந்த பெண்களின் கண்கள் குழிக்குள்ளிருந்து பார்ப்பன போலிருந்தனவாம்.

"வயிற்றினில் வாயினர்
வளைந்த நெற்றியில்
குயிற்றிய விழியினர்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரின் உணவு
# மாமிசமா மரக்கறியா?

மாத்தளை — அருணேசர்

( ஆடி இதழின் தொடர்ச்சி )

மேலும், சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே மாமிசத்தை மற்ற பெரும்பான்மையான மரக்கறிப் பதார்த்தங்களுடன் கலந்து கலந்து அவித்துச் சாப்பிட்டு வருபவர்களுக்கே அவ்வாகாரம் மிக்க கடினத்தோடும் நீண்ட உழைப்போடும் சீரணமாக வேண்டியிருக்கிறது.

முன் பின் மாமிசம் உண்டறியாத ஒருவர் திடீரென அதனை உண்பாராயின் அது சற்றும் சீரணமாகாமல் உடனே உயிருக்கும் மோசம் விளைவித்துவிடுமென்றால் மாமிசத்தாலுண்டாகும் செரியாக் குணத்தை கூறவும் வேண்டுமோ?

அமெரிக்க வைத்தியர் பெர்க்ஸ் என்பவர், "மாமிசத்தைப் புசிப்பதனால் அசீரண மேற்பட்டு வாயு ரோகம் முதலிய பல நோய்களை உண்டாக்குகின்றன" என்று கூறியுள்ளார்.

எல்லிஸ் பார்க்கர் என்பவர், அசீரண நோயுண்டாகாமல் சுகத்துடனிருப்பதற்கு மாமிச உணவை உண்ணக் கூடாது என்று கூறியுள்ளதோடு, தாமும் அவ்விதமே நீக்கி பழவர்க்கங்களை உண்டு வந்தார்.

சர் வில்லியம் அர்பத்ன்ட்லேன் அவர்களும் இவரின் கருத்தை ஆதரித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பியுமான்ட் என்னும் ஆசிரியர் ஒருவர், மாமிச உணவும் மரக்கறி உணவும் உடம்பில் செரிமானமாகும் நேரங்கள் இவ்வளவு இவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்து, ஒரு துண்டு மாட்டிறைச்சி செரிப்பதற்கு 3½ மணி நேரம் செல்லுமென்றும், நல்ல கொழுமையான பன்றி இறைச்சி செரிப்பதற்கு 5½ மணி நேரத்துக்கு மேலும் வேண்டப்படுமென்றும், காய்ச்சிய பால் இரண்டே மணி நேரத்தில் செரிமானமாகுமென்றும், பூப்பதமாய் வெந்த நெல்லரிசிச் சோறு ஒரு மணி நேரத்திலேயே செரித்துவிடுமென்றும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னமேயே எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

மரக்கறி உணவுகளில் பெரும்பாலானவும் ஒரு மணி நேரமுதல் 2½ மணி நேரத்திற்குள் நன்றாய்ச் செரித்து விடுகின்றன. ஆனால் மாமிச உணவுகளில் பெரும்பாலானவோ எனின் உண்டதிலிருந்து 3 மணி நேரம் கடந்த பின்னரே செரிக்கும் என்பது ஆராய்ந்தறியப்பட்டுள்ளது.

சித்தெண்டன் என்ற ஓர் ஆராய்ச்சியாளர், மரக்கறிகளோடு மாமிசத்தையுஞ் சேர்த்து உண்பவர்கள் 15 முதல் 20 சத அளவுள்ள பிசிதப் பொருளை உட்கொள்கின்றார்கள் என்றும், இவ்வளவு கூடுதலான பிசிதப் பொருள் மனிதருக்குத் தேவைக்கு மிஞ்சியதென்றும் ஆராய்ச்சியின் மூலமாய் நிரூபித்துள்ளார். 100-க்கு 10 வீதமான பிசிதம் உட்கொண்டாலே போதுமென்று அவர் கூறுகின்றார். இந்தக் கணக்குப்படி மரக்கறிப் பதார்த்தங்களை மட்டும் உண்டாலேயே 10 சத வீதம் பிசிதப் பொருள் கிடைத்து விடுகிறது. மாமிசம் கலந்தால் பிசிதம் மிஞ்சி விடுகிறது. வயது முதிர்ந்தவர்களின் உடலை பிசிதப் பொருள் பலமாகப் பாதிக்கின்றன என்றும் கூறியுள்ளார்.

ஏ. ஜி வைட் என்னும் அம்மையார் கூறியுள்ளதாவது: "புலால் உணவில் கழிவுப் பொருள் சிறிதே மிஞ்சும். அதனால் அது மலச் சிக்கலைப் பிறப்பிக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மரக்கறி உணவிலோ கழிவுப் பொருள்கள் அதிகமாக இருந்து மலப் போக்கை இலகுவாக்கும். மலச் சிக்கலின்றிக் குடல்களைக் காப்பதால் மக்களுக்கு நோய் பற்றுதபடி காக்குந்தன்மை மரக்கறி உணவில் அடங்கியிருக்கிறது.''

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மாள் அவர்கள் 1926-ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த புலால் மறுத்தல் மகாநாட்டில் தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றியபோது, மாமிசம் அளவுக்கு மிஞ்சிய கொழுப்புச் சத்து அடங்கியதாகையால் அதை உண்பதனால் சீரணக் கருவிகளுக்கு அளவுக்கு மீறிய உழைப்பு ஏற்பட்டு செரியாமை முதலிய நோய்கள் ஏற்படுவதாகக் கூறியுள்ளார்.
மேலும் அவர் கூறியதன் சுருக்கமாவது:-

மனிதரின் உணவில் (1) புரோடீட், (2) கார்போஹைட்ரேட், (3) கொழுப்புத் தாதுப் பொருள்கள், (4) வைட்டமின் என்னும் சீவசத்துக்கள் ஆகிய ஐந்து பொருள்களும் அளவாகக் கலந்திருப்பதே முழுமையான உணவாகும். இவை ஒவ்வொன்றும் நம் உடலுக்குத் தேவையான அளவுடன் இருந்தால் அதுவே நம் உடலுக்குப் போதுமானது.

1. புரோடீட் என்னும் சத்து குளிர்மிகுந்த நாடுகளில் வாழும் மக்களின் உணவில் ஆறில் ஒரு பகுதி இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. நம் நாடு போன்ற சூடான வெப்பமான நாடுகளில் வாழ்பவர்களுக்கு இந்த அளவுக்குக் குறைவாகவே இருக்க வேண்டும். ஆனால் எல்லா நாடுகளிலும் இறைச்சி உண்பவர்களில் செல்வர்களாயுள்ளோர் உடம்பின் தேவைக்கு அதிகமாகவே 'புரோடீட்' உட்கொள்ளுகிறார்கள்.

இது இங்கிலாந்து முதலிய குளிர் நாடுகளில்கூட சீரணக் கருவிகளுக்கு அளவுக்கு மீறிய உழைப்பைத்தந்து கல்லீரல், குண்டிக்காய் நோய்களுக்கும், சந்து வாதம் என்னும் நோய்க்கும் காரணமாகிறது. நீர் ரோகத்திற்குக் கூட அளவுக்கு மிஞ்சிய உணவருந்துதலே காரணமென்று விஞ்ஞான ஆராய்ச்சி நிரூபித்திருக்கிறது. குளிர் நாடுகளிலேயே இப்படி புரோடீட் அதிகமாக உண்பதால் பலகேடுகள் உண்டாகுமானால், நம்முடைய இந்தியா போன்ற வெப்பமான நாடுகளில் அதனால் எவ்வளவு கேடுகள் உண்டாகக் கூடும்? அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சல்லவா? பெருந்தீனி தின்பது உடலுக்கு நோய் தேடுவது போன்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரகவணக்கம்

சிவாகம ஞானசாகரம் N. இராமநாதசிவாச்சாரியார்—திருக்கோலக்கா

## சனி பகவான்

வெய்ய சுடரோன் சாயை மேவுமகன் சூற்கரத்தான்
பைய நடக்கின்ற பங்கு கருமெய்யன்
இனியன் அருணங்கால் இன்றேல் கொடியன்
சனியன் அவன் சிற்றம் தவிர்.

மஹா தபஸ்வியான காசியப்ப மகரிஷியின் வம்சத்தில் தோன்றிய ஸ்ரீ சூரியபகவானுக்கும் சாயா (ப்ரத்யுஷா) தேவிக்கும் தோன்றியவர் சனைச்சரபகவான்! இவரது வரலாறு பலபுராணங்களிலும் வர்ணிக்கப்படுகிறது. சூரியபகவான் த்வஷ்டா என்பவரின் பெண்ணான ஸம்க்ஞா (உஷா) தேவியை மணந்தார். மது யமன் என்ற இரண்டு குமாரர்களையும் யமுனா என்ற குமாரியையும் உண்டு பண்ணினார்.

ஸம்க்ஞா தேவியானவள் சூரியனது தேஜோ மண்டலம் அதிகமாயிருப்பதால் அதை தாங்கிக் கொண்டு அவருடன் இருப்பது கஷ்டமாயிருப்பதால் தனது சக்தியால் தன் நிழலையே ஒரு பெண்ணாக வரும்படி செய்தார். அது ஜீவக்களையுடன் வந்து "என்னை ஏன் படைத்தாய். நான் என்ன செய்ய வேண்டும்" என்று என்று கேட்க, "நிழலில் இருந்து தோன்றியதால் சாயா (ப்ரத்யுஷா) என்ற பெயரோடு விளங்குவாய். நான் வரும் வரையில் என் கணவனிடம் என்னைப் போலவே இரு" என்று கூறி 'நான் சில காலம் சென்ற பின் வருகிறேன்' என்று பிறந்த வீடு சென்றாள். த்வஷ்டா தன் பெண்ணை வரவேற்று கணவனை விட்டு நீ மட்டும் வருவது தர்மமில்லை. நீ அவரிடம் சென்று அவரையும் அழைத்துக் கொண்டு வந்து தங்குவது தான் முறை' என்று கூற சம்க்ஞா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியானவள் இப்போது அங்கு செல்வது சரியில்லை என நினைத்து குருக்ஷேத்திரம் என்ற இடத்தில் தவம் செய்து கொண்டிருந்தாள்.

சாயாதேவி ஸாவர்ணி மனு, சனைச்சரன் என்ற இரண்டு குமாரர்களையும் பெற்றாள். சனைச்சரனுடைய பார்வை மிகக்ரூரமாக இருந்தது. இதையறிந்த தாயான சாயா தேவி பஞ்சாக்ஷர மந்திரத்தைபெற்று சிவபூஜை செய்யுமாறு கூற சிந்துத்வீபர் என்ற மஹரிஷியிடம் பஞ்சாக்ஷரி மந்திரத்தை பெற்றுக்கொண்டு முக்தி க்ஷேத்திரமான ஸ்ரீ காசியம்பதியில் (வாரணாசி) நித்தியவாசம் செய்யும் ஸ்ரீ அன்னபூரணி விசாலாக்ஷி உடனாகிய ஸ்ரீ விஸ்வேஸ்வரரையும் வணங்கிக்கொண்டு அத்தலத்தில் ஒரு லிங்கம் தாபித்து பலகாலம் தவம் செய்தாள். அத்தவத்திற்கிரங்கிய சிவபெருமானும் பல வரங்கள் தந்து க்ரஹங்களில் ஒருவனாகவும் ஜனங்களின் நல்வினை தீவினைக்கு உகந்தாற் போல் பலனளிக்கவும் ஆயுளுக்கு அதிபதியாகவும் இருக்க வரம் தந்து அருளினார். பிறகு சனைச்சரன் ஸௌராஷ்ட்ர (குஜராத்) தேசத்திற்கு அதிபதியாக இருந்து கொண்டு கிருஷ்ணாம்பா (ஜ்யேஷ்டா தேவி) என்பவளை மணந்து கொண்டு நவக்கிரஹங்களில் ஏழாவதாக இருந்து கொண்டு ஆயுள்காரணாக விளங்குகிறார்.

ஒருகால் சற்று ஊனமாக இருப்பதால் மெதுவாக நடப்பவராதலால் பங்கு பாதர் சனைச்சரர், என்ற பெயர் வழங்கலாயிற்று. இவரால் பாதிக்கப்பட்டவர்கள் பலர். குறிப்பாக நளச்சக்கரவர்த்தி இவரால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். நளன் பல கஷ்டங்களுடன் பல தலங்களை தரிசித்து வந்ததில் தர்ப்பை காடாயிருந்த திருநள்ளாறு தலத்தில் போகமார்த்த பூண்முலையாள் உடனாகிய ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரரை வழிபட்ட பிறகு சிவபெருமான் அருளாணையின் வண்ணம் ஸ்ரீ சனைச்சரர் எல்லாக் கஷ்டங்களையும் நீக்கி அருள் பாலித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனைச்சரரை வழிபட்டால் எல்லாக் கஷ்டங்களும் நீங்கும். ஜன்மராசிக்கு முன் இரண்டரை ஆண்டும் ஜன்ம ராசியில் இரண்டரை ஆண்டும் ஜன்ம ராசிக்குப் பின் இரண்டரை ஆண்டும் ஆக ஏழரை ஆண்டு இவரது ஆதிக்க காலம். ஜன்ம ராசிக்கு எட்டாவது வீட்டிற்கு வந்து இருக்கும் போது அஷ்டமத்து சனியென்பர். இது ஏழரையாண்டு செய்வதை இரண்டரை ஆண்டில் செய்யும் என்பர். சனைச்சரனைப் போல் கொடுப்பவனும் கெடுப்பவனும் யாருமில்லை. புதன், சுக்கிரன் ராகு, கேது நால்வரும் மிக நட்புடையவர்கள். சூரியன் சந்திரன் செவ்வாய் மூவரும் பகைவர்கள்.

ஏழரைநாட்டுச் சனி ஒருவரது ஆயுட்காலத்தில் மூன்று தடவைகள் வரக்கூடும். முதல் தடவை வரும் போது மங்கு சனியென்றும், இரண்டாவது தடவை வரும்போது பொங்கு சனியென்றும், மூன்றுவது தடவை வரும்போது மரணச் சனியென்றும் பெயர். பொதுவாக எந்தச் சனியாக இருந்தாலும் ஏழரை நாட்டுச் சனி மனிதனுக்கு ஒரே சோதனை காலமாகத் தான் இருக்கும். அந்த ஏழரை நாட்டுச் சனியைக் காட்டிலும், கொடியது ஒன்று உண்டு என்றுல் அது தான் சந்திரனுக்கு எட்டாம் இடத்தில் சஞ்சரிக்கின்ற "அஷ்டமத்துச் சனி." (அகப்பட்டுக் கொண்டவனுக்கு அஷ்டமத்துச்சனி) யென்பது பழமொழி. ஏழரை நாட்டுச்சனியில் முதல் ஐந்து ஆண்டுகள் கடுமையாக இருந்தாலும் மீதி உள்ள இரண்டரை ஆண்டுகள் கடுமையாக இராது. நன்மைகளும் செய்யும். அஷ்டமத்துச் சனியின் கொடுமைகளில் ஏறக் குறைய சரிபாதியைத் தருவது அர்த்தாஷ்டமச்சனி (நாலாமிடத்து சனி.) சனியும் சூரியனும் சேர்ந்து இருந்தால் எதிலும் கெட்டபெயர், மந்த புத்தியும் பகைவர்களுக்கு வசப்பட்டும் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனி உடன் சந்திரன் சேர்ந்திருந்தால்:- ஏழ்மையாகவும் மனைவி பொல்லாதவராயும் இருப்பர்.

" செவ்வாய் " " :- வாய்ப்பாட்டுக்காரராகவும் எப்போதும் சஞ்சலமுடையவராகவும் இருப்பர்.

" புதன் " " :- கணிதக்கலையில் வல்லவன்; பகையில்லாதவனாயும் சிறந்த கல்விமானாகவும் இருப்பர்.

" குரு " " :- அறிவில்லாதவனாயும் கஷ்டமுடையவனாகவும் இருப்பர்.

" சுக்கிரன் " " :- பல ஆண்களும் பெண்களும் தனக்கு பணியாளராக இருப்பர். தன் மனைவியால் அவமானத்திற்கு ஆளாவான்.

" ராகு கேது " " :- மனச்சஞ்சலம், அபமிருத்யு தோஷம், மாந்திரீகம், செய்வினை ரோகம் முதலியண உண்டாகும்.

வில்போன்ற ஆசனத்தில் அமர்ந்த சனிபகவானுக்கு மகரமும் கும்பமும் சொந்த வீடுகள். துலாம் உச்சி வீடாகவும், மேஷம் நீச வீடாகவும் இருக்கின்றன. தான் இருக்கும் இடத்திற்கு 3, 7, 10 பார்வையுடையவராக உள்ளவர். காசியப கோத்திரரான சனிபகவானுக்கு கருப்பு வஸ்திரம், இந்திர நீலரத்னம், நீலோத்பல புஸ்பம், எள்ளுதானியம், வன்னிசமித்து எள்ளு சாதம், எள்ளுபொடி, எள்ளுருண்டை, நல்லெண்ணெய் தீபம், கருப்பு பசுதானம், யதுகுல காம்போதி ராகம், இவைகளில் பரமப்ரீதி. ப்ரஜாபதியை அதிதேவதையாகவும், யமனை ப்ரத்யதி தேவதையாகவும் கொண்ட இவருக்கு அன்யபார்வைகளில் விருப்பதிகம் உடையவராக இருப்பார். காகத்தை வாகனமாகவும், கொடியாகவும் உள்ளவர். சிவபக்தர்களிடமும் விஷ்ணு பக்தர்களிடமும் மிக அன்புடையவர். விஷ்ணுவை உபாசிப்பவர். சனிக்கிழமை விஷ்ணுபூஜை விசேஷம்.

## பொதுப்பலன்

சனிபகவான் லக்கினத்தில் இருந்தால்:- சோம்பல், மறதி, தூக்கம், காமம், அடிக்கடி வியாதி முதலியண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சனிபகவான் 2ஆம் இடத்தில் இருந்தால்: | | முகத்தில் ரோகம், பின் யோசனை, பொய் சொல்லுதல், ஸஞ்சாரம், வஞ்சனை உண்டாகும். |
| 3ஆம் இடம் | ,, | சம்பிரமாயிருத்தல், யசஸ் ஆயுஸ்விருத்தி, பத்னி சுகம், செல்வம் இவைகளைத் தருவார்; |
| 4ஆம் இடம் | ,, | துக்கம், தாய்க்கு அரிஷ்டம். வீடு பூமி, வாகனம் இவைகளை நீக்கும். ரோகம் தீர்த்தயாத்திரை. |
| 5ஆம் இடம் | ,, | புத்தி குறைவு, மனக்கஷ்டம். புத்திரர்களுக்கு கஷ்டம், அல்ப சந்தோஷம், கெட்ட சகவாசம், |
| 6ஆம் இடம் | ,, | தனம், சத்ருஜயம், பலயோகம் தைரியம் முதலியன. |
| 7ஆம் இடம் | ,, | அழகில்லா மனைவி, ஏழையாவான் யாத்திரை, ஸ்திரியால் துன்பம், வாயுஉபாதை முதலியன. |
| 8ஆம் இடம் | ,, | கஷ்டம், நோய், நீண்ட ஆயுள் முதலியன. |
| 9ஆம் இடம் | ,, | தந்தைக்கு அரிஷ்டம், அதர்மம், அயோக்யதனம், புத்ரக்லேசம், நண்பர்கள் துவேசம் முதலியன. |
| 10ஆம் இடம் | ,, | பரப்புத்தன்மை, க்யாதி, ஞானம், மந்திரி பதவி. |
| 11ஆம் இடம் | ,, | ஆயுள் வளரும். பலபோகம், சொற்ப லாபம். |
| 12ஆம் இடம் | ,, | வெட்கமில்லாதவனாகவும், மூர்க்கனாகவும், சத்ருபாதை உள்ளவனாகவும், ரோகியாகவும் இருப்பார். |

சனிபகவான் பேறுபெற்ற தலம்:- காசி, வாரணாசி

சனிபகவானால் அருள்பெற்ற தலம்:- திருநள்ளாறு காரைக்கால் சமீபமுள்ளது

சுவாமி:- தர்ப்பாரண்யேசுவரர்

அம்பாள்:- போகமார்த்த பூண்முலையாள்

தீர்த்தம்:- பல உள்ளது. குறிப்பாக சிறப்பானது நளதீர்த்தம் இத்தீர்த்தத்தில் நல்லெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து சனிபகவானை வணங்கினால் எல்லாக் கஷ்டங்களும் நீங்கி நன்மையுண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமத வினாவிடை

நாகர் கோவில் கே. ஆறுமுகநாவலர்

முன் தொடர்ச்சி

## சிவலிங்கம்

60. ஆவுடை லிங்கத்தின் கீழ் அடங்கியிருத்தல் எதனைக் குறிக்கின்றது?

சக்தி, சிவத்துக்குள்ளே அடங்கித் தொழில் செய்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

61. கோமுகி என்பது யாது? அது எதைக் குறிக்கின்றது?

ஆவுடையாளின் மேற்பாகத்தில் வெளியே நீண்டிருக்கும். இது சிவசக்தி உயிர்களுக்குச் செய்யும் தண்ணளியைக் குறிக்கின்றது. இதனாலேயே ஆலயவழிபாடு செய்யும் அடியார்கள் கோமுகி வழியாகப் பாயும் அபிஷேக தீர்த்தங்களை இறைவனது திருவருள் சுரப்பதாக மதித்துக் கையால் ஏந்தித் தலையில் தெளித்துச் சிவனருள் பெற்றதாக மகிழ்கிறார்கள்.

62. சிவலிங்கத்தின் முன்பாகக் காணப்படும் நந்தி அல்லது காளை மாடு எதை உணர்த்துகின்றது.

மாடு என்பது சாஸ்திரங்களில் தர்மதேவதை எடுக்கும் ரூபம்; ஆதலால் மாடு தர்மத்தை உணர்த்தும். நந்தி என்பதற்கு ஆனந்திப்பது என்றும் பொருள் உண்டு. வெண்மையான மாடாதலால் ஸாத்வீகத்தையும், பரம் பொருளாகிய லிங்கத்தினிடம் கொண்டு சேர்க்கும் சற்குணங்களாகிய சமம், விசாரம், ஸந்தோஷம், ஸாதுசங்கம் ஆகிய நான்கு ஆத்ம குணங்களையும் உணர்த்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. "நந்தியின் அனுமதியின்றிச் சிவதரிசனம் செய்ய முடியாது" என்பதன் இரகசியம் யாது?

முற்கூறிய நான்கு ஆத்ம குணங்களும் ஒருவனுக்கு ஏற்பட்டாலல்லது கடவுளை ஸச்சிதானந்த அறிகுறிருபமாக உணர முடியாது என்ற தேவரகசியத்தை வெளிப்படுத்தும்.

64. கோயிலில் பிரதக்ஷிணங்கள் செய்யுங்கால் நந்திக்கும் லிங்கத்திற்கும் குறுக்கே போகலாகாது, நந்தியையும் சுற்ற வேண்டும் என்பதன் இரகசியம் என்ன?

ஸச்சிதானந்த அனுபவத்திலிருந்து வெளிப்பட்டுப் பிரபஞ்ச விவகாரத்தில் வரும்போது, மேற்கூறிய ஆத்ம குணங்கள் வழியாக அனுபவம் சேரும் வழிக்கு விரோதமானவற்றைச் செய்யாது ஆத்ம குணங்களிலேயே நிற்க வேண்டும் என்பதாகும்.

65. சக்தி, சிவம் அவற்றின் விளையாட்டு என்ற இவற்றை விஞ்ஞானிகள் எவற்றோடு உவமிக்கிறார்கள்?

சிவம் — மேட்டர் (Matter)
சக்தி — எனர்ஜி (Energy)
விளையாட்டு — ஆக்டிவிட்டி (Activity)
சிவசக்திகளை "கைனிட்டிக் எனர்ஜி" — பொட்டென்ஷியல் எனர்ஜி என்றும் கூறுகிறார்கள்.

66. இவற்றை நாம் அறிய வேண்டுவது எதற்கு? சிவலிங்கத்தைப் பற்றி ஆபாசமாகச்சிலர் கூறும் இழிப்புரைகளை ஒழிப்பதற்கும் சிவலிங்க வழிபாடு செய்கின்றவர்கள் இதன் தத்துவத்தை உணர்ந்து வழிபட்டால் மாத்திரமே நன்மை பெறக்கூடுமாகையினாலும் இத்தத்துவங்கள், அன்பர்கள் அனைவரும் ஐயந்திரிபற அறியற்குரியனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பனுபித் தௌஹீத்" எனும் ஐக்கியநிலை

Dr. K.M.P. முஹம்மது காசிம்

மனிதன் உண்மையிலேயே விடுதலையை விரும்புகிறான், சுகத்தை நாடுகிறான். ஆனால் அவைகளை வாழ்க்கையில் அனுபவிக்க முடியவில்லை. இதற்கு முக்கிய காரணமென்ன? மனம் சதா சலித்து சலனமடைவதேயாகும். உணர்ச்சிகளின் கொந்தளிப்பால் உந்தப்பட்ட மனம் ஆசைகளின் வெறியினால் வேகமுற்ற மனம் துன்பத்திலும் துயரத்திலும் சதா சுழன்று கொண்டே இருக்கிறது. இது ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் நிகழும் சாதாரண அனுபவமாகும். ஆகவே, வாழ்க்கை ஒரு பிரச்சனையாக மட்டுமல்ல ஒரு பெரும் போராட்டமாகவும் இருக்கிறது.

மஹான்களது சரித்திரத்தை வெகு நுட்பமாக உற்று நோக்கினால் ஒன்று மட்டும் நிச்சயமாக தெளிவாகத் தெரிகிறது. அதாவது அவர்கள் தனிமையிலிருந்து கடுந்தவம் புரிந்து பல கஷ்டங்களின் மத்தியிலே மனதுடன் போராடி தெய்வீக நிலையை அடைந்திருக்கிறார்கள். இறைவனை அடைவதற்கு மஹான்களது தொடர்பு அவசியம். அவர்களது உபதேசங்களை உள்ளதை உள்ளவாறு நன்கு தெளிவுடன் ஆராய்ந்து அவைகளை அனுஷ்டானத்தில் கொண்டு வருவதும் மிக மிக இன்றியமையாதது. ஆனால் ஒன்று மட்டும் உண்மையாகும். சாதகன் ஒருவனுக்குத் தனது மனமே பெரும் தடையாக இருக்கிறது. ஆகவே, மனம் நாமரூப விவகாரத்தை மறந்து பூரணமாக ஒடுங்கி ஆன்ம சாட்சியாக இருந்து பழகுவதே துன்பத்தினின்றும் விடுதலை பெற சிறந்த மார்க்கமாகும். தேறித் தெளிந்த மெய்ஞ்ஞானிகளின் உபதேசங்கள் ஆத்மீக வாழ்விலே முன்னேற விரும்பும் ஒரு சாதகனுக்கு எவ்விதம் ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியிலே செல்ல வேண்டுமென்பதை உணர்த்துகிறது. ஆனால், ஒவ்வொரு நிமிஷமும் வாழ்க்கையில் ஏற்படும் பற்பல இன்ப துன்ப மோதல்களை வெகு கவனமாகக் கவனித்து மனதை ஒன்றுபடுத்திடும் உத்தம நிலையில் முன்னேற வேண்டியது சாதகனின் புனிதக் கடமையாகும்.

ஏனெனில் அகண்ட பொருள் எங்கும் எப்பொழுதும் எல்லோரிடத்திலும் பரிணமித்திருக்கிறது. அந்த மகா சக்தியை அந்த உன்னத உயர்வான உணர்வெளியை எவராலும் யாருக்கும் எடுத்துக்கொடுத்து விடும் பொருளல்ல. ஆகவே, குருநாதர்களின் குறிக்கோள் ஆத்மீக அனுபூதி நிலையில் வாழ்ந்து காட்டுவதாகும். அவர்கள் எந்த ஆத்மீக உச்ச நிலையில் வாழ்கிறார்கள் என்பது பரம ரகசியமாகும். இஸ்லாமிய அந்தரங்க வழியாகிய ஸூபி தத்துவத்தில் பனுபித்தௌஹீத் என்னும் நிலைக்கே வெகு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் ஒரு மனிதன் தன் மனதில் நிகழும் எண்ணற்ற ஆசைகளின் வீச்சல்களை அமைதிப்படுத்தி எண்ணங்களற்ற மகா மௌனத்தில் பொறிபுலன்கள் யாவும் அடங்கிய வேளையிலேயே அகண்டத்தின் தொடர்பு ஏற்படுகிறது. அதுவே, அருள் எனும் நிஷ்டையாகும். இந்த அனுபவத்தை தனிப்பட்ட மனிதன் தன் மனதையே சதா விருப்பு வெறுப்பின்றி விளங்கி அந்தக்கரணங்களின் சேஷ்டைகளற்று சும்மாயிருக்கும் நிலையில், அருள் நாட்டத்தில் சிதையாது வாழ்வதே பனுபித்தௌஹீத் எனும் ஐக்கிய நிலையாகும்.

---

''ஞானியும் பிறரைப் போல உலகில் சஞ்சரிக்கிறன்; அவனும் உண்ணுகிறன்; பானம் செய்கிறன்; பிறருடன் பழகுகிறன். ஆனால் பிறர் உலகத்தைப் பல வகையில் பிளவு பட்டதாய்க் காண்கையில், ஞானி ஒன்றாக, பிளவுபடாததாகக் காண்கிறன். தன்னிடம் ஆத்மாவைக் கண்டு பிறரிடமும் ஆத்மாவைக் காண்கிறன்.''

— ஞான இன்பவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானகுருவின் அனுக்கிரகம்

க. குருநாதன்

மாதா பிதா குருதெய்வம் என்னும் வாக்கியம் எம்மக்களிடையே வழங்கப்பட்டு வருவதொன்ருகும். ஆயினும் இக்காலத்தில் இதை எச்சத விகிதத்தினர் கடைப்பிடிக்கின்றனரென்பது கேள்விக்குரிய விடயம். ஏனெனில் தற்காலத்தில் எது பிரதான இடம் எடுக்கவேண்டுமோ அது இன்றி இன்னென்றே அவ்விடத்தைப் பெரும்பாலும் எடுப்பதைக் காண்கிறேம். மாந்தர் தம் வாழ்வில் தர்மத்தைக் கைக்கொண்டு, பொருளீட்டி, நுகரக்கூடிய இன்பத்தினை நுகர்ந்து இம்மையில் வாழ்வாங்கு வாழ்ந்து, மறுமையிலும் வீடுபேறடைவதே நோக்கமாக இருக்கவேண்டுமென்பதை பெருமளவு சமயங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன இதுவே ஒரு கிரமமாக இருத்தல் நன்மை பயக்கும் என்பதும் திண்ணம். இந்தக்காலத்து மக்களின் வாழ்க்கையை, வீட்டை, நாட்டை, உலக நாடுகளை ஈர்த்திழுக்கும் பொருளியல் கோட்பாடு போன்று அக்காலத்திலும் இருந்திருக்கின்றது. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் இதற்குச்சான்ருகின்றது. இனி இந்த இவ்வுலக வாழ்விற்கு அத்தியாவசியமான பொருளீட்டலுக்கு கல்வி மிக தேவையான தொன்ருகின்றது. மேலும் ஒருவனை பூரணப்படுத்துவதற்கு அது மிக இன்றியமையாததென்பதைக் கோடிட்டுக் காட்ட வேண்டியதில்லை. இதுபற்றியே வள்ளுவரும் தமது திருக்குறளில்,

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றரோடு ஏனையவர்" என்றும்

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்புடைத்து

என்றும் பலவாருகக் கூறுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீகம் மிக முதிர்ச்சியடைந்ததாகக் கூறப்படும் இக்காலத்தில் கல்வியானது பல்வேறு பிரிவுகளையுடையதாகப் போதிக்கப்பட்டு வருகின்றது. அறிவியல், நுண்கலை, தொழிற்கல்வி, தொழில் நுட்பக்கல்வி, பல வகைக்கிளைகளைக் கொண்டதான விஞ்ஞானம், இன்னும் கல்வியிலே உன்னத நிலையுற்ற மெய்ஞ்ஞானம் என்றிவ்வாறாக பிரிவுபட்டிருத்தலைக் காண்கிறோம். எனினும் முன் கூறப்பட்ட பிரிவுகள் பகுத்துக் காண்பதை மெய்ஞ்ஞானம் தொகுத்து யாவற்றையும் உள்ளடக்கி ஒருமைப்பாட்டைக் காண்பதை அவதானிக்கலாம் இனி நாம் தற்போது எடுத்துக்கொண்ட விடயத்திற்கேற்ப ஒரு ஞானகுருவின் அனுக்கிரகம் எப்படியும் மெய்ஞ்ஞான அவாவுற்ற சாதகரொருவருக்குக் கிட்டியே தீருகிறதென்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இதற்கு நாம் பல்வேறு நிலையிலுள்ள படித்தரங்களிலுற்ற காலங்களிலிருந்தவர்களின் வரலாற்றைச் சற்று நோக்குவோம். இத்தருணத்தில் அவதார புருஷர்களெனக் கணிக்கப்படும் ஸ்ரீ இராமர் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா இன்னும் சென்ற நூற்றாண்டளவில் தோன்றிய இராமகிருஷ்ணபரமஹம்சர் ஆகியோரை நோக்குவோம்.

எத்துணைதான் தெய்வாம்சம் பொருந்திய அவதாரமெனினும் அவர்கட்கும் ஓர் குரு இன்றியமையாதது என்பதை ஸ்ரீ இராமபிரானுக்கு விஸ்வாமித்திர முனிவர் குலகுருவாக இருந்து நானாவித கல்விப்பயிற்சியை அளித்தமை புலனாக்குகின்றது. அதுபோலவே கோகுலவாசியான ஸ்ரீ கிருஷ்ணரும் சாந்தீப முனிவர் என்பவரிடம் குருகுல முறையில் இருந்து கல்வி பயின்றதாகவும் அவர் பாலிய நண்பனான குசேலரும் அவருடன் அங்கிருந்து கல்வி கற்றதாகவும் கூறப்படுகின்றது. பின்பொருமுறை வறுமையில் வாடிய குசேலர் துவாரகையில் கண்ணனைக் கண்டு செல்வம்பெறும் நோக்குடன் சென்ற பொழுது இருவரும் குசலம் விசாரித்த போது குருகுலத்தில் இருவரும் நடந்த பழைய சம்பவங்களை நினைவூட்டிக் கொண்டமையும் அறியக்கூடியதாக இருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. இவ்விதமே ஸ்ரீ இராமக்கிருஷ்ணபரமஹம்சரும் தோதாபுரி என்னும் அத்வைத வேதாந்த குருவினிடமும் சில தாந்திரீக (சக்தி உபாசனை) முறைகளை பைரவி பிரம் மணி என்பவரிடமும் பயின்றதாகக் கூறப்படுகின்றது. மேலும் ஆதிசங்கரர் தனது வேதாந்தக்கோட்பாட்டை உள்ளடக்கிய பிரம சூத்திரம், உபநிடதக் கருத்துக்கள் கீதோபதேச சாரம் யாவும் கற்றதுடன் அத்வைத பாவனையை குருவாகிய கோவிந்த பகவத்பாதரிடம் கற்ற தாகவும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ சங்கரரின் பாரத திக்விஜயத்தின் போது காசியம் பதியில் விஸ்வநாதப் பெருமானே ஓர் சண்டாளனின் ரூபத்தில் நான்கு நாய்களுடனும், மது நிரம்பிய கலச மொன்றுடனும் அவரை எதிர்ப்பட்டு அத்வைதம் பற்றி வாதிட்டு (நால்வகை வேதங்களுமே நாய்களாகவும்; மது மயக்கத்தை தரும் மாயையாகவும்) தனது நிஜவடிவைக் காட்டியருளி சங்கரரின் அகந்தையை அடக்கி உண்மை யான அத்வைதம் என்றால் என்ன என்பதையும் விளக்கி யருளினார் என்பதும் வரலாறு. இந்த இடத்தில் சங்கர ரின் அகந்தையை பிறருக்குத் தீங்கில்லாத பழுத்த அகங் காரம் என்றே குறிப்பிட வேண்டும். அதுவும் முக்தி நிலைக்கு, யாவும் ஒன்றே என்ற உணர்வுக்கு தடையாக இருக்கக்கூடுமாகையால் தவிர்க்கப்பட வேண்டுமென்பதே உள்ளார்த்தம். இனி மேலை நாட்டிலும் கீழைத் தேசத் திலும் வேதாந்த சிம்மமென விளங்கிய சுவாமி விவேகா னந்தர் ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சரின் முதன்மையான சிஷ்யராகவிளங்கியவரே. சுவாமி விவேகானந்தரின் இறப் பியல்பு அன்னாரின் வேதாந்தக் கொள்கைகள் மேல்நாட் டவர்களும் அறிந்து தெளிந்து பின்பற்றக் கூடியதாயிருந் தமையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி திருத்தலக் கீர்த்தனைகள் (2)

இயற்றியவர் "ஆனந்த பைரவி"

## முன்னேஸ்வரம் வடிவாம்பிகை

*பல்லவி*

கல்யாண வசந்த நவராத் திரிநாளில்
காணவந் தேன் உனையே வடிவாம் பிகைதாயே
(கல்யாண)

*அநுபல்லவி*

உல்லாசியே உனது எழில்கொஞ்சும் திருக்கோலம்
ஒருநாளும் நான்மறவேன் ஓடிவருவேன் மீண்டும்
(கல்யாண)

*சரணங்கள்*

முன்னேஸ்வரப் பதியில் முன்னைநாதர் அருகில்
மூலப் பரம்பொருளாய் நீ இருந்தாய் தாயே
என்னே உனது எழில் ஏழுலகம் வியக்கும்
என்றும் மனத்திருக்கும் இன்னருளை வழங்கும்
(கல்யாண)

அழகுக்கு ஒருவருமே நவ்வாத வல்லிதிரு
அபிராமி வாமிஉமை ஆனந்த பைரவி நீ
பழகும் அடியார்விழி பார்த்துப் பார்த்தே சிவந்தாய்
பார்வதியே எழில் சர்வாங்க சுந்தரியே.
(கல்யாண)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G.P.O. as a Newspaper M. L 359/00.

# சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

நமது 'ஆத்மஜோதி' மாதஇதழ், 1948ம் ஆண்டு முதல் கடந்த 31 ஆண்டுகளாக மிகவும் நல்ல முறையில் சிறப்புற நடைபெற்று வருவது நேயர்கள் அறிந்ததே.

பத்திரிகை விலை உயர்வு, முத்திரைச் செலவு முதலானவற்றின் அதிகரிப்புக் காரணமாக 32வது ஆண்டுமுதல் ஜோதியின் சந்தாவை அதிகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். கடந்த 31 ஆண்டுகளாகச் சோதிக்குக் கிடைத்த அன்பர்களின் ஆதரவு எதிர்காலத்திலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு அன்பர் இல்லத்திலும் ஜோதி சுடர் விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

எனவே சந்தா நேயர்கள் கீழ்க்கண்ட புதிய விகிதத்தின்படி சந்தாவை அனுப்பி வைப்பதோடு புதிய அங்கத்தினரையும் அறிமுகம் செய்து வைத்து ஜோதியின் வளர்ச்சிக்குத் தொண்டு புரியுமாறு வேண்டுகிறோம்.

## ஆத்மஜோதி சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இலங்கைக்கு மாத்திரம் வருடச் சந்தா | ரூபா | 15-00 |
| இந்தியாவுக்கு வருடச் சந்தா | ரூபா | 20-00 |
| இவை தவிர்ந்த ஏனைய நாடுகள் | | 5 வெள்ளி |
| ஆயுள் சந்தா | ரூபா | 300-00 |
| தனிப் பிரதி | ரூபா | 1-25 |

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி - (ஸ்ரீலங்கா)

ஆசிரியர்: நா. முத்தையா
அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி.
அச்சிட்ட திகதி: 17-8-79.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org